# மாலை தீப்பொறி

MALAE THEEPORI




2024 ஜனவரி 1-15 தொகுதி 22 இதழ் 10

விலை ரூ.10 ஆண்டு சந்தா ரூ.200

## வீழ்க பாசிசம்! வெல்க இந்தியா!!

## சிபிஐ(எம்எல்) அறைகூவல்!



## 2024 ஜனவரி 26 முதல் ஜனவரி 30 வரை

## ஜனநாயகம் காக்க, அரசியலமைப்புச் சட்டம் காக்க

## மக்கள் உறுதியேற்கும் இயக்கம்!

# மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட தென் மாவட்ட மக்களுக்கு நிவாரண உதவிகள்

திருநெல்வேலி, தூத்துக்குடி உள்ளிட்ட தென் மாவட்டங்களில் வெள்ளத்தால் மக்கள் கடும் பாதிப் பிற்கு உள்ளாகியுள்ளனர். பல குடும்பங்கள் தங்கள் வாழ்வாதாரத்தை முற்றிலும் இழந்துள்ளார்கள்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவி வழங்குவதற்காக கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில அமைப்புச் செயலாளர் தோழர் கு.பாரதி, இகக (மாலெ) மாநிலச் செயலாளர் தோழர் பழ.ஆசைத்தம்பியிடம் 19.12.2023 அன்று ரூ.50,000 வழங்கினார். மாலெ கட்சியின் மத்தியக் கமிட்டியும் மாவட்டக் கமிட்டிகளும் மக்களிடம் வசூலித்து வழங்கினார்கள்.



நெல்லை மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளை மார்க்சிஸ்ட் லெனினிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் தோழர் பழ. ஆசைத்தம்பி, மாநில நிலைக்குழு உறுப்பினர் தோழர் ஜி.ரமேஷ், புரட்சிகர இளைஞர் கழக மாநிலப் பொதுச் செயலாளர் தோழர் தனவேல், அகில இந்திய மாணவர் கழக மாநிலக்குழு உறுப்பினர் தோழர் பாண்டிக்குமார், ஏஐசிசிடியு நெல்லை மாவட்ட பொதுச் செயலாளர் தோழர் கணேசன் ஆகியோர் 22.12.2023 அன்று பார்வையிட்டனர். பின்னர் இகக(மாலெ) அரசியல் தலைமைக் குழு உறுப்பினர் தோழர் வீ.சங்கர், மாநிலச் செயலாளர் தோழர் பழ. ஆசைத்தம்பி, மாநில நிலைக்குழு உறுப்பினர் தோழர் ஜி.ரமேஷ் ஆகியோர் நெல்லை, தூத்துக்குடி மாவட்டங்களில் 26.12.23 மற்றும் 27.12.23 தேதிகளில் பாதிக்கப்பட்ட மக்களைச் சந்திந்து நிவாரண உதவிகள் வழங்கினர். அவர்களுடன் கட்சியின் நெல்லை மாவட்டச் செயலாளர் தோழர் எம். சுந்தர்ராஜ், தூத்துக்குடி மாவட்டப் பொறுப்பாளர் முருகன், மாநிலக் குழு உறுப்பினர்கள் கணேசன், சகாயம் மற்றும் தமிழர் உரிமை மீட்புக் களம் அமைப்பு தலைவர் தோழர் லெனின் கென்னடி ஆகியோரும் கலந்து கொண்டனர்.




27.12.23 அன்று நெல்லை மாவட்ட மார்க்சிஸ்ட் லெனினிஸ்ட் கட்சி அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் நிவாரணப் பொருள்களை மார்க்சிஸ்ட் லெனினிஸ்ட் மாநிலச் செயலாளர் பழ. ஆசைத்தம்பி, கம்யூனிஸ்ட் கட்சி மாநில அமைப்புச் செயலாளர் கு.பாரதி, இகக(மாலெ) மாநில நிலைக்குழு உறுப்பினர் த.சங்கரபாண்டியன், ஜி.ரமேஷ், நெல்லை மாவட்டச் செயலாளர் சுந்தர்ராஜ், மாநிலக்குழு உறுப்பினர் கணேசன், தோழர்கள் சேக் முகமது, மோகன் குமார் ஆகியோர் வழங்கினார்கள்.



பாளையங்கோட்டையில் 24.12.23 அன்று நடை பெற்ற மார்க்சிய பெரியாரியவாதி, பண்பாட்டுப் பேரறிஞர் தொ.பரமசிவன் அவர்களின் 3ம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்ச்சியில் மாலெ தீப்பொறி ஆசிரியர் ஜி.ரமேஷ், மார்க்சிஸ்ட் லெனினிஸ்ட் நெல்லை மாவட்டச் செயலாளர் எம்.சுந்தர்ராஜ் நிவாரண உதவிகள் வழங்கினார்கள். நிகழ்ச்சியில் பேராசிரியர் சுப.சோம சுந்தரம், தொ.ப. மாசானமணி, தமிழர் உரிமை மீட்புக் களம் அமைப்பாளர் கணேசன், செல்வராஜ், மானத்தி யப்பன், பேச்சிராஜா, இசக்கிராஜா உட்பட பலர் கலந்து கொண்டனர். ❑

2024 ஜனவரி 1-15

மாலெ தீப்பொறி

இருவார இதழ்

தொகுதி 22 இதழ் 10

உள்ளே


| | |
|---|---|
| வீழ்க பாசிசம் வெல்க இந்தியா | 4 |
| தோழர் திருமாவளவன் பேட்டி 2ம் பாகம் | 9 |
| ஜெர்மன் நாஜிசமும் சங்கிப் பாசிசமும் | 13 |
| ஜனவரி 22 எதிர் ஜனவரி 26 | 20 |


**முதன்மை ஆசிரியர்**
**வீ.சங்கர்**

**ஆசிரியர்**
**ஜி.ரமேஷ்**

**ஆசிரியர்குழு**
**பாலசுந்தரம்**
**பழ.ஆசைத்தம்பி**
**அ.சந்திரமோகன்**
**கே.ஜி.தேசிகன்**

**மேலாளர்**
**சொ.இரணியப்பன்**

**இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட் – லெனினிஸ்ட்) தமிழ்நாடு மாநிலக்கமிட்டியின் அரசியல் ஏடு**

**1/10, 11ஆவது தெரு,**
**கருணாநிதி நகர்,**
**அயனாவரம், சென்னை – 23**

**நிர்வாக அலுவலகம்**
**3/254பி, ஜீவா தெரு,**
**வண்டலூர்**
**சென்னை – 600048**

தொலைபேசி: **9443507067**
**9840340741**

malaetheepori@gmail.com
www.tamilnadu.cpiml.net
cpimlthamilnadu.blogspot.com

**தலையங்கம்**

# மீளமுடியாத துயரத்தில் மக்கள் நீரோ மன்னர்களாக ஆட்சியாளர்கள்

புத்தாண்டு 2024 பெரும்பான்மை மக்களுக்கு சோகமாகவே பிறந்திருக்கிறது. 2023 டிசம்பர் 2இல் சென்னையை சுற்றியுள்ள வட மாவட்டங்களிலும் டிசம்பர் 17இல் திருநெல்வேலி, தூத்துக்குடி உள்ளிட்ட தென் மாவட்டங்களிலும் பெய்த மழையினாலும் ஏற்பட்ட வெள்ளத்தினாலும் மக்களில் பலர் இன்னும் பாதிப்பிலிருந்து மீளாமுடியாத நிலையில் இருக்கிறார்கள். குறிப்பாக நெல்லை, தூத்துக்குடி மாவட்டங்களில் ஆற்றங்கரை மற்றும் கால்வாய்கரைகள் பக்கம் வசித்தவர்கள் வீடுகளில் வெள்ள நீர் புகுந்து, அனைத்து பொருள்களும் நாசமாகிவிட்டன. பல வீடுகளில் ஒரு சிறிய பொருள், ஊக்கு கூட இல்லாத அளவிற்கு வெள்ளம் அடித்துச் சென்றுள்ளது. வெள்ளத்தின் போது உடுத்தியிருந்த துணியைத் தவிர மாற்றுத் துணி இல்லாமல் பல குடும்பங்கள் திண்டாடிக் கொண்டிருக்கின்றன. எல்லா வீடுகளில் வெள்ளம் அடித்துச் சென்றதுபோக எஞ்சிய துணி மணிகளையும், வீட்டுப் பத்திரங் களையும், பள்ளிக் குழந்தைகளின் புத்தகங்களையும் நாட்கணக்கில் காயவைத்துக் கொண்டிருக் கிறார்கள். ஆதார் கார்டு,ரேசன் கார்டுகள், மாணவர்களின் சான்றிதழ்கள் பல வீடுகளில் காணமல் போய்விட்டன அல்லது சகதி படிந்து நாசமாகிப் போய்விட்டுள்ளன. டிவி, மிக்ஸி, கிரைண்டர், ஃபேன், செல்போன் என மின்னணுச் சாதனங்கள் எல்லாம் நாசம். ஒரு பொருளும் இல்லாத அல்லது இருந்தும் பயன்படுத்தப்பட முடியாத வீடுகள் பல உள்ளன. அவர்களுக்கு வெறும் ரூபாய் 6000 என்பது வீட்டிற்குள் புகுந்த சகதியை வெளியேற்றுவதற்குக் கூட பத்தாது. தென் மாவட்டகள் சந்தித்த சுனாமி இது. ஓராண்டு மழை ஓரே நாளில் பெய்தது என்றபோதிலும் தென் மாவட்டங்களின் நீர் நிலைகளை சரியாகப் பராமரிக்காததும் முன்னெச்சரிக்கை நடவடிக்கை சரியாக எடுக்காததும் ஒரு காரணம். மார்க்சிஸ்ட் லெனினிஸ்ட் கட்சி உட்பட பல்வேறு கட்சிகள், தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள், இஸ்லாமிய, கிறிஸ்தவ அமைப்புகள் நிவாரணப் பொருள்கள் வழங்கினாலும் அவை எதுவும் சில மாதங்களுக்குக்கூட தாங்காது. இந்தச் சூழலில் ஒன்றிய மோடி அரசு, தென் மாவட்டங்களின் பாதிப்பை தேசியப் பேரிடராக அறிவிக்க முடியாது என்கிறது. ஒன்றிய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன், ஒப்புக்கு ஓரிரு இடங்களைப் பார்த்துவிட்டு, கோயிலுக்குள் நின்று கொண்டு வெள்ளத்தால் பாதிப்பு அவ்வளவு இல்லை, உண்டியலில் காசு போடாதே, உள்ளே கொடு என்று சொல்லிக் கொண்டிருக்கிறார். ஒன்றிய அரசு ரூ.21,000 கோடி ஒதுக்க வேண்டும் என்று தமிழ்நாடு முதல்வர் கேட்டால், ரூ.2000 கோடி கூட கொடுக்கத் தயாராக இல்லை. ஜிஎஸ்டி உள்ளிட்ட வரி கட்டுவதில் 3ம் இடத்தில் இருக்கும் தமிழ்நாட்டிற்குத் தர வேண்டிய பாக்கியைத் தரக் கேட்டால், ஒங்க வீட்டுப் பணம் இல்லை அரசாங்கப் பணம் என்கிறார் நிதியமைச்சர் நிர்மலா. அது ஒங்கப்பன் வீட்டுப் பணம் இல்லை, மக்கள் அரசுக்குச் செலுத்திய பணம் அதைத்தான் கேட்கிறோம் என்றார் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின். உடனே அப்பன் என்று மரியாதை யில்லாமல் சொல்லலாமா ? என்று விவாதம். ஆண்டவனையே நெல்லையில் அம்மையப்பன் என்று தான் சொல்வார்கள் என்பது இந்து மத வெறிக் கூச்சல் போடும் சங்கிக் கூட்டத்திற்குத் தெரியாதா என்ன? இவர்களுக்கு பிரச்சினையைத் திசை திருப்ப வேண்டும். திருச்சிக்கு வரும் பிரதமருக்கு திருநெல்வேலிக்கு வந்து பார்வையிட நேரமில்லை. வீட்டிற்குள் அடுத்த வேளை சோத்துக்கு வழியில்லாமல் மக்கள் வாடித் துடித்துக் கொண்டிருக்க, விமான நிலைய விரிவாக்கம், பேருந்து நிலைய விரிவாக்கம் என்று வீண் தம்பட்டம் அடித்துக் கொண்டிருக்கிறார்கள். நிவாரணப் பொருள்களுக் காகவும் அரசு கொடுக்கும் வெறும் ஆயிரம் ரூபாய்க்கும் மக்கள் முட்டிமோதிக் கொண்டிருக்கிறார்கள். தமிழ்நாட்டில் காலூன்றத் துடிக்கும் பாஜகவின் ஒன்றிய அரசு, உரிய நிதியை தமிழகத்திற்கு ஒதுக்காமல் வஞ்சிக்கிறது என்றபோதிலும் தமிழ்நாடு அரசு, மக்களைப் பிச்சைக்காரர்களாக மாற்றும் நிலைக்கு மாறாக, நாட்கள் ஆனால் மறந்துபோகும் அல்லது பழகிப் போகும் என்ற நிலைக்கு மாறாக மக்களின் வாழ்வாதாரத்தைக் காக்க, அவர்களின் மறு வாழ்வுக்கு ஒரு நிரந்தரத் தீர்வு ஏற்படுத்தும் வகையில் ஒரு கேந்திரமான நடவடிக்கையை உடன் மேற்கொள்ள வேண்டும். இல்லையேல் மக்களின் பெருங் கோபத்திற்கு ஆளாக நேரிடும். ❑

சிபிஐ எம்எல் கட்சி அறைகூவல்!

# வீழ்க பாசிசம்! வெல்க இந்தியா!

இந்த நாடே வரவிருக்கும் நாடாளுமன்றத் தேர்தலை எதிர்நோக்கி இருக்கிறது. "இந்து ராஷ்ட்ரா" உருவாக்கும் கனவுகளில் சங்கி பரிவாரங்கள் மிதந்து கொண்டு இருக்கிறார்கள்.

'ரத யாத்திரை' என்ற பெயரில் மத வெறித் தூபம் போட்டு வளர்க்கப்பட்டது. நாடு முழுவதும் ரத்த ஆறு ஓடியது. கர சேவை என்கிற பெயரில் நாடு முழுவதும் இருந்து ராமர் கோவில் கட்டுவதற்கான செங்கற்கள் கொண்டு வரச் சொன்னார்கள். அந்தக் கற்களை நாடாளுமன்றத்திற்குள் நுழைவதற்கான படிக்கற்களாக மாற்றிக் கொண்டார்கள். கோத்ராவில் ரயில் பெட்டியில் தீ வைத்தார்கள். பக்தர்கள் மடிந்தார்கள். சில ஆயிரம் மக்களைக் கொன்று குவிப்பதற்கான காரணமாக அதைப் பயன்படுத்திக் கொண்டார்கள். குஜராத் மாநில அரசும் போலீஸ் நிர்வாகமும் வேடிக்கை பார்த்தது. அல்லது ஆதரவு அளித்தது. கொன்று குவிக்கப்பதற்கென திட்டமிட்டு வளர்க்கப்பட்ட மதவெறி எனும் தீயையும், கார்ப்பரேட் மூலதன நலன் எனும் ஆற்றலையும் பயன்படுத்தினார்கள். ஊதுகுழல் ஊடகங்கள் கோயபல்ஸ் பரப்புரை அரண்களாக நின்றன. ஆட்சிக் கட்டிலில் ஏறினார்கள்.

பாபர் மசூதி இடிக்கப்பட்டது. இந்திய நாட்டின் பன்முகத் தன்மை, மதச் சார்பற்ற மாண்பு கிழித் தெறியப்பட்டது. அரசியல் அமைப்புச் சட்டம் கிடப்பில் போடப்பட்டு பஞ்சாயத்து செய்யப் பட்டது. பாபர் மசூதியை ராமர் கோவிலாக்க நீதிமன்றத்தால் அனுமதி வழங்கப்பட்டது. அயோத்தியில் ராமர் கோவிலைக் கட்டி முடித்து, ஜனவரி 22ல் அதைத் திறப்பதன் மூலம் 2024ல் நாடாளுமன்ற அரியணையின் வாசற் கதவுகளை பிஜேபிக்குத் திறந்து விடலாம் என சங்கிகள் கனவுக் கோட்டை கட்டிக் கொண்டிருக்கிறார்கள். 100 நாட்களுக்கு ஆயிரம் ரயில்கள் நாடு முழுவதுமிருந்து அயோத்தியாவுக்கு விடப்படும் என்கிறார்கள். 'ராமர் கோவிலுக்கு தர்ம தரிசனம்' என மத்தியப்பிரதேச, சத்தீஸ்கர் மாநிலத் தேர்தல்களில் தேர்தல் வாக்குறுதி யாகவும் அள்ளி வழங்கப்பட்டது. தர்ம தரிசன சவடால்களின் பின்னால் மக்களின் சொல்லொணா வறுமையும் தலைவிரித்தாடும் வேலையில்லாத் திண்டாட்டமும் மறைக்கப் படுகின்றன. ராமர் கோவில் பெயரில் வெறுப்பு அரசியலை தூபம் போட்டு வளர்க்கிறார்கள். 500 ஆண்டுகள் காத்துக் கிடந்ததன் அடையாளமாக நாடு முழுவதும் வீடுவீடாக 5 தீபங்கள் ஏற்ற அழைப்பு விடுப்பது சாமியார்கள் அல்ல, இந்த நாட்டின் பிரதமர். மதச் சார்பற்ற நம் தாய்நாட்டை ஒரு மதச் சார்பு நாடாக மாற்றும் முயற்சி இது. அறைகூவல் விடுக்கப்படுவது தீபங்கள் ஏற்றுவதற்காக அல்ல, வெறுப்பு அரசியலைப் பற்ற வைப்பதற்காக. ராமர் பெயரால் மத உணர்வைத் தூண்டி நாட்டு மக்கள் அனைவரையும் பிஜேபிக்கு வாக்களிக்கச் செய்வ தற்காக. மதம் என்பது அரசியலோடு, அரசு செயல் பாட்டோடு தொடர்புடையதாக இருக்கக் கூடாது. அதுதான் மதச் சார்பின்மை. ஆனால், மோடியின் தலைமையிலான பிஜேபி அரசு அரசமைப்புச் சட்டத்துக்கு எதிராகச் செயல்படுகிறது.

சட்டத்தின் ஆட்சி என்பதற்குப் பதிலாக சட்ட மீறல்களின் ஆட்சி என்பதாக மோடியின் பிஜேபி ஆட்சி அவதாரம் எடுத்திருக்கிறது. கிரிமினல் சட்ட திருத்தங்கள் முதல் தொழிலாளர் சட்டங்கள், வேளாண் சட்டங்கள் வரை தற்போதைய சட்ட மீறல்களே சட்டமாக்கப் படுகின்றன.

அரசு நிர்வாகம், கல்வி, சுகாதார நிறுவனங்கள், ஆராய்ச்சி நிறுவனங்கள், கலாச்சார அமைப்புகள் முதல் ராணுவம், நீதித் துறை வரை அனைத்தும் மதவெறி அரசியலுக்குத் துணை செல்பவர்களால் நிரப்பப்படுகிறது. அதற்குத் தடையாக இருக்கும் சட்டங்கள், விதிகள், அரசாணைகள் திருத்தப் படுகின்றன.

பில்கிஸ் பானோ வழக்கு முதல் தீண்டாமை குறித்த வழக்குகள் வரை அனைத்திலும் குற்றவாளி கள் விடுவிக்கப்படுகிறார்கள். மதவெறி, வெறுப்பு உணர்வுகள், வெறுப்பு அரசியல் தூபம் போட்டு வளர்க்கப்படுகிறது. மக்களின் துன்ப துயரங்களுக்கு சிறுபான்மையினரே காரணம் என சுட்டிக்காட்டப் படுகிறது. அவர்களை ஒழித்தாலேயன்றி இந்துக் களுக்கு வாழ்வில்லை என வெறுப்பு அரசியல் ஊட்டி

வளர்க்கப்படுகிறது.

மதவெறி சார் வெறுப்போடு கூடவே சாதி வெறுப்பும் அதற்கு இணையாகவே வளர்க்கப் படுகிறது. நாடு முழுக்க தலித் மக்கள் மீதான தாக்குதல் அதிகரித்து வருகிறது. தலித் பெண்கள் மீதான பாலியல் வன்முறைகள், ஆணவக் கொலை கள், கூட்டுப் பாலியல் வன்முறைகள் பெருமளவு அதிகரித்து இருக்கின்றன. முற்பட்ட சாதியினரின் வளர்ச்சிக்குத் தடையாக இருப்பது, தலித் மற்றும் பிற்படுத்தப்பட்ட மக்களும் அவர்களுக்கான இட ஒதுக்கீடும்தான் என காரணம் காட்டப்படுகிறது. மாதம் ரூ.65,000 அளவு வருமானமுள்ள முற்பட்ட வகுப்பினர் கூட ஏழைகளே என்று கூறி பொருளா தாரத்தில் நலிந்த பிரிவினருக்கான (EWS) இட ஒதுக்கீடு வழங்கப்படுகிறது. விஸ்வகர்மா திட்டம் போன்ற திட்டங்களின் மூலம் சாதீயப் படிநிலையை யும் குலத் தொழிலைக் கட்டாயமாக்கும் இழி நிலையையும் உறுதிப்படுத்துவதற்கான சூழ்ச்சிகள் அரங்கேற்றப்படுகின்றன. கேர்லாஞ்சி முதல் ஹத்ராஸ் வரை தலித் மக்கள் மீதான தாக்குதல்கள் எண்ணற்றவை. 2018 முதல் 2021 வரை பதியப்பட்ட வழக்குகளே 1.8 லட்சம் ஆகும். இன்னும் பதியப் படாத வெளிச்சத்துக்கு வராத தலித் மக்கள் மீதான தாக்குதல்கள் பலப்பல லட்சங்கள் ஆகும்.

இவற்றின் மூலம், வெறுப்பு என்பதை மக்களின் பொது உணர்வாகவும், அது நியாயம்தான் என்பதை ஒரு பொதுப்புத்தியாகவும் மாற்றிடுவதற்கான முயற்சிகள் தீவிரமாக நடந்து வருகின்றன.

இவற்றை எதிர்த்து கருத்து சொல்லும் கௌரி லங்கேஷ் போன்றவர்களை சுட்டுத் தள்ளுவதற்கான ஆர்எஸ்எஸ்சின் மதவெறி சாதி வெறிப் படைகள் ஏற்கனவே களத்தில் இருக்கின்றன. மற்றவர்களை பொய் வழக்கு புனைந்து, கேள்வி கேட்க முடியாமல் பல ஆண்டுகள் சிறையில் தள்ளுவதற்கான ஊபா போன்ற சட்டங்கள் ஏற்கனவே செயல்படுத்தப்பட்டு வருகின்றன. மணிப்பூரும் காஷ்மீரும் மோடி ஆட்சி யின் விதிவிலக்குகள் அல்ல, மாறாக ஆர்எஸ்எஸ்– பிஜேபி அரசியலின் முன்மாதிரிகளாக முன் வந்திருக் கின்றன.

டாக்டர் அம்பேத்கர் முக்கிய பங்காற்றி, உருவாக்கப்பட்ட இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தை, நவீன இந்தியாவின் அஸ்திவாரத்தை மாற்றி அதன் இடத்தில் காட்டுமிராண்டி காலத் துக்கான ஒரு சட்டமாக, சாதீயப் படிநிலையைக் கட்டிக் காப்பதற்காக உருவாக்கப்பட்ட மனு ஸ்மிருதியை இந்திய அரசியல் அமைப்புச் சட்டமாக்கிட வேண்டும் என துடிக்கும் ஒரே கட்சி பிஜேபிதான். மனு ஸ்மிருதி இந்திய நாட்டில் உள்ள 97 சதவீத மக்கள் அனைவரும் மேல்சாதியான மூன்று சதவீத பிராமணர்களுக்கு சேவை செய்வதற்கென்றே பிறந்தவர்கள் என்கிறது. அதை மறுப்பவர்கள், கேள்வி கேட்பவர்களுக்கு என்ன தண்டனை என்பதை விலாவாரியாக விளக்கி இருக்கிறது. பெண்களை மிக மோசமாக சித்தரிக்கிறது. ஆணாதிக்கத்தை, பெண்கள் மீதான ஒடுக்குமுறையை நியாயப் படுத்துவது மட்டுமல்ல, நிறுவனமயப்படுத்த முயற்சிக்கிறது.

அதே போல, இந்தியாவின் நாடாளுமன்ற ஜனநாயக முறையை ஒழித்து, மன்னர் கால சர்வாதி காரத்தை ஒத்த, ஹிட்லரின் பாசிசத்துக்கு ஈடான ஒரு ஆட்சியை, அதிபர் ஆட்சி போன்றதோர் ஆட்சி வடிவத்தை, இந்து ராஷ்ட்ரா என்கிற பெயரில் அமைத்திடுவதை தனது குறிக்கோளாகக் கொண்டி ருக்கிறது. அவர்கள் கனவு காணும் அந்த இந்து ராஷ்ட்ராவின் அரசியல் அமைப்புச் சட்ட முன்மாதிரி தான் மனு ஸ்மிருதி.

பிஜேபியைப் பொறுத்தளவில், இந்து ராஷ்ட்ரா அமைப்பது நோக்கமாக சொல்லப்பட்டாலும் அதில் இந்துக்கள் யாரென்று கேட்டால், அது கோடிக் கணக்கான உழைக்கும் இந்துக்கள் அல்ல, இந்து பொது மக்கள் அல்ல. அதானிகளும் அம்பானிகளும் அது போன்ற கார்ப்பரேட் முதலாளிகளும்தான் இந்துக்கள். தொழிலாளர் சட்ட திருத்தங்கள் முதல் விவசாயிகளுக்கு எதிரான சட்டங்கள் வரை, அரசு சொத்துக்களை விற்பது முதல் அக்னிவீர் திட்டம் வரை, கல்விக் கொள்கை முதல் தொழிற் கொள்கை வரை அனைத்துமே இது இந்து மக்களுக்கு எதிரான ஆட்சி, இந்து உழைக்கும் மக்களுக்கு எதிரான ஆட்சி, கார்ப்பரேட் முதலாளிகளுக்கு ஆதரவான ஆட்சி என்பதையே உறுதிப்படுத்துகின்றன.

இந்தப் பின்னணியில், மோடியின் பிஜேபி ஆட்சி, இந்திய நாட்டின் மதச் சார்பற்ற விழுமியங் களுக்கு எதிரானது மட்டுமல்ல, இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்துக்கு, இந்திய பாரம்பரியமான நாடாளுமன்ற ஜனநாயக முறைக்கு எதிரானது. இந்திய மக்களுக்கு, உழைக்கும் மக்களுக்கு எதிரானது. அதனால்தான், வரவிருக்கும் நாடாளு மன்றத் தேர்தலில் பிஜேபியை ஆட்சியை விட்டு அகற்றுவது, ஆட்சியிலிருந்து தூக்கி எறிவது இந்தியக் குடிமக்கள் ஒவ்வொருவரின் கடமையாக

முன்வந்திருக்கிறது.

முதல்முறையாக, இந்தியாவிலுள்ள எதிர்க் கட்சிகள் அனைத்தும், சிபிஐ எம்எல் உட்பட, கரம் கோர்த்து, ‘இந்தியா’ என்கிற மிகப்பெரும் கூட்டணியை உருவாக்கி இருக்கின்றன. ‘இந்தியா’ கூட்டணியின் உதயம், இந்தியா என்கிற நாட்டின் பெயரையே பாரத் என மாற்ற வேண்டும் என பிஜேபி கூக்குரலிடுகிற அளவுக்கு அவர்களுக்கு பெரிய கவலையாக எழுந்திருக்கிறது.

வரவிருக்கும் தேர்தலில் 50 சதவீதத்திற்கும் அதிக வாக்குகள் பெறவில்லை என்றால் வெல்ல முடியாது என தெரிந்து கொண்டு 50 சதவீதத்திற்கும் மேல் வாக்குகள் பெறுவதை பிஜேபி தனது இலக்காக கொண்டிருக்கிறது. நடந்து முடிந்த 5 மாநிலகளின் தேர்தல்களிலும் கூட அதையேதான் இலக்காக கொண்டிருந்தாலும் பிஜேபி அவ்வளவு வாக்குகள் பெற முடியவில்லை என்பதை நாம் கவனிக்க வேண்டும்.

சமீப சில ஆண்டுகளாக தமிழ் நாட்டில் காலூன்றிட வேண்டும் என துடித்துக் கொண்டிருக் கிறது பிஜேபி. முதல் சுற்றில், விநாயகர் பூஜையை தமிழ் நாட்டில் பெரிய விழாவாக்க முயற்சித்தது. விநாயகர் ஊர்வலங்களை இஸ்லாமியர் வாழும் பகுதிகளினூடே கொண்டு சென்று மதக் கலவரங் களை உருவாக்கிட முயற்சித்தது. சிறைகளுக்குச் சென்று தனது உறுப்பினர் சேர்ப்பு இயக்கத்தைத் துவங்கியது. அருந்ததியரைக் கவர்வதற்காக அவர்கள் மத்தியிலிருந்து தலைவர்களை உருவாக்க முயற்சித்தது. வெற்றி வேல், வீர வேல் என்று தமிழ் மக்களின் கடவுளாக இருக்கும் முருகனைத் தனது மதவெறி ஊட்டும் நிகழ்ச்சிநிரலுக்கு, காவிஅரசியல் மயமாக்குவதற்கு முயற்சி செய்தது.

தமிழ் நாட்டில் உள்ள சாதிய முரண்பாடு களைத் தனக்குச் சாதகமாக பயன்படுத்தி வருகிறது. தமிழ் நாட்டின் வணிக சமூகங்கள் முதல் தலித் மக்கள் வரை அனைவரையும் சாதி ரீதியாக பிளவுபடுத்தி தனது வெறுப்பு அரசியலை வளர்க்க கடும் முயற்சி மேற்கொண்டு வருகிறது. அதிமுகவின் மீது சவாரி செய்து மாநிலம் முழுவதுமான தனது இருத்தலைப் பதிவு செய்ய முயற்சித்து அதில் ஓரளவு வெற்றியும் பெற்றிருக்கிறது. ஆர்எஸ்எஸ் அதன் பங்குக்கு தனது அமைப்பை வலுப்படுத்திக் கொள்ள, நீதிமன்ற அனுமதி பெற்று, மாவட்ட வாரியாக பேரணிகளை நடத்தி வருகிறது. சட்ட விரோதமாக பள்ளிகளில் சாகாக்கள் நடத்துகிறது. பள்ளிகளில், ஆர்எஸ்எஸ் சாகாக்களில் ஆயுதப் பயிற்சி கொடுப்பதாகவும் புகார்கள் எழுந்த வண்ணமாக உள்ளன.

”என் மண், என் மக்கள்” என ஒரு பயணத் தைத் துவங்கினார் அண்ணாமலையார். அத்வானி யின் ரத யாத்திரை போல பெரும் வெற்றி பெறும் என நம்பியது பிஜேபி. அது தமிழ் நாட்டில் எந்த தாக்கத்தையும் ஏற்படுத்தவில்லை.

ஆனால், தமிழ் நாட்டின் முற்போக்கு விழுமி யங்களைத் தகர்த்திட, பெரியாரை சிறுமைப் படுத்திட கருத்தியல் மட்டத்தில் கடும் முயற்சி மேற்கொண்டு வருகிறது. தமிழ் நாட்டு மக்களை சாதி ரீதியாக பிளவுபடுத்திட, மத வெறியை ஊட்டிட, வரலட்சுமி விரதம், கோவில் விழாக்கள், பண்டிகை களை காவி அரசியல்மயமாக்கிட கடும் முயற்சி மேற்கொண்டு வருகிறது. கல்யாண ராமனை, கோசல ராமனை, ஜானகி ராமனை, மதவெறி அரசியல் ராமனாக மாற்றி இருக்கிறது பிஜேபி. நாம் அதை எதிர்கொண்டு முறியடித்திட வேண்டிய அவசியம் இருக்கிறது.

கண்ணுக்குத் தெரியும் விதத்திலும், கண் ணுக்குத் தெரியாத விதத்திலும் பல்வேறு வகை களில் பிஜேபி மாநில உரிமைகளைப் பறித்து வருகிறது. தமிழ் நாட்டின் உரிமைகளைக் காப்பது, நாட்டின் கூட்டமைப்புத் தன்மையைக் காப்பது என்பது மிகப்பெரும் சவாலாக இன்று உதித்தி ருக்கிறது. தமிழ் நாட்டு மக்கள் தமிழ் மண்ணிலிருந்து ஓடஓட விரட்டியடித்த இந்தித் திணிப்பு, இப்போது சமஸ்கிருதத் திணிப்போடும் கைகோர்த்துக் கொண்டு வலம் வருகிறது. தமிழகத்தில் இருக்கும் ஒன்றிய அரசுத் துறைகளில் வேலைவாய்ப்பில் தமிழர்களுக்கு இருந்த முன்னுரிமை பறிக்கப்பட்டு, தமிழர்களுக்கு வேலை கிடையாது எனும் நிலை உருவாகி உள்ளது. நீட் தேர்வு திணிக்கப்படுகிறது. மதவெறியை பொதுவான உணர்வாக மாற்றிட பல்வேறு வடிவங்களில் முயற்சிக்கப்படுகிறது.

பெண்ணுரிமைக்கான, ஆணாதிக்கத்துக்கு எதிரான, ஒடுக்கப்பட்ட மக்களின் சுயமரியாதைக் கான, பார்ப்பனிய எதிர்ப்புப் போராட்டத்திற்கு வித்திட்ட பெரியாரின் கருத்துக்களை, ஒடுக்கப் பட்ட மக்களின் உரிமைக்கான நீண்ட நெடிய போராட்டத்தை நடத்திட வலு சேர்த்த அம்பேத்கரின் கருத்துக்களை, மனித சமூக வளர்ச்சி குறித்த அறிவியல் பூர்வமான பார்வைகளைச் சிதைத்திட, மூட நம்பிக்கையை வளர்த்திட பிஜேபி மேற் கொள்ளும் முயற்சிகளுக்கு நாம் தக்க பதிலடி

கொடுக்க வேண்டிய அவசியம் இருக்கிறது. அத்தகைய சவாலை சிபிஐஎம்எல் கட்சி ஏற்றுக் கொண்டிருக்கிறது. பெரியாரின் வாரிசுகள் என்று சொல்பவர்கள் கூட பெரியாரின் கருத்துக்களை நீர்த்துப் போகச் செய்கிறார்கள் என்றால், அந்தப் போராட்டத்தை முன்னின்று நடத்தும் பெரியார் அம்பேத்கர் கருத்துக்களின் மரபுத் தொடர்ச்சி, அதை உயர்த்திப் பிடிக்கும் இயக்கமாக சிபிஐஎம்எல் இருக்கும்.

இத்தகைய பிரச்சனைகளில், பிஜேபியை வீழ்த்திடும் பாசிச எதிர்ப்புப் போராட்டத்தின் ஒரு பகுதியாக, உடன் பயணிக்கும் அனைத்துவிதமான அரசியல் கட்சிகளோடும் அமைப்புகளோடும், பிஜேபியைத் தோற்கடிக்கும் ஒரே நோக்கத்துடன், சிபிஐஎம்எல் கரம் கோர்க்கிறது.

அதே நேரத்தில், அநீதிகளுக்கு எதிராக, கார்ப்பரேட் பாதையிலான வளர்ச்சிப் போக்குகளுக்கு எதிராக, கார்ப்பரேட் ஆதரவு கொள்கைகளுக்கு எதிராக, உழைக்கும் மக்கள் மீது தொடுக்கப்படும் தாக்குதல்களுக்கு எதிராக, சமரசமற்ற போராட்டத்தை நடத்துவதிலும் முன்னணியில் இருக்கிறது. அதுதான், சிபிஐஎம்எல் கட்சியின் புரட்சிகர மரபு.

சமூக நீதி என்பதை வெறும் இட ஒதுக்கீடு எனும் குறுகலான பொருளில் நாம் புரிந்து கொள்ள முடியாது. சமூக நீதி எனும் சொல்லாடல், சமூக, பொருளாதார, அரசியல், கலாச்சார நீதி மற்றும் உரிமைகள் எனும் அனைத்தும் தழுவியதோர் பொருளைக் கொண்டது. அதன் அனைத்தும் தழுவிய பொருளிலான சமூக நீதிக்கான போராட்டத்தில் சிபிஐஎம்எல் முன்னிலையில் இருக்கிறது.

பாசிச எதிர்ப்புப் போராட்டத்தை வலுப்படுத்துவதில் தமிழ் நாட்டுக்கு, சிபிஐ எம்எல் கட்சிக்கு ஒரு முக்கிய பங்கு இருக்கிறது. பலரும் 'பாசிசம்' என்ற சொல்லாடல் குறித்து தயங்கிக் கொண்டிருந்தபோது சிபிஐஎம்எல் கட்சி இது பாசிசம்தான் என்று அறுதியிட்டுச் சொன்னதோடு மட்டுமல்ல, அதன் இந்தியத் தன்மையையும் துல்லியமாக எடுத்துரைத்தது.

பிஜேபி அபாயம் என்பது அகில இந்திய அளவில் எதிர்கொள்ளப்பட வேண்டிய ஒன்று என்பது மட்டுமல்ல, தமிழ்நாட்டிலும் கூட அதன் முயற்சிகளை நாம் புறந்தள்ளி விட முடியாது. பிஜேபியின் முயற்சிகள் உடனடியாக பெரும் வெற்றி பெறும் வாய்ப்பு இல்லை என்றாலும், நீண்ட கால நோக்கில் அதன் சிதைப்பு நடவடிக்கைகளை குறைத்து மதிப்பிட முடியாது. எனவே, தமிழ் நாட்டிலும் பிஜேபியின் வெறுப்பு அரசியலுக்கு எதிரான கருத்தியல் போரின் முனையைக் கூர்மைப் படுத்திட வேண்டும்.

'வீழ்க பாசிசம்' என்பது முதலாவதாக, வரவிருக்கும் தேர்தலில் பிஜேபியைத் தோற்கடிப் போம் எனப் பொருளாகும். வரவிருக்கும் நாடாளு மன்றத் தேர்தலில் பிஜேபியைத் தோற்கடிப்பது இந்திய மக்களின், தமிழ் நாட்டு மக்களின் உடனடி கடமை. அதில் வேறுபாடு இல்லை. ஆனால், அதே நேரத்தில், அது பிஜேபியைத் தேர்தலில் தோற்கடிப்ப தோடு நின்று போகும் முழக்கமல்ல. அது வீழ்க பிஜேபி, வீழ்க மனு ஸ்மிருதி, வீழ்க வெறுப்பு அரசியல், வீழ்க கார்ப்பரேட் ஆதரவு ஆட்சி, வீழ்க இந்திய மக்கள் விரோத ஆட்சி, வீழ்க கொடுங் கோன்மை ஆட்சி என்றும் பொருளாகும். வீழ்க மதவெறி, வீழ்க சாதிவெறி என பொருளாகும். அது பாசிசக் கருத்துக்களை வேரோடும் வேரடி மண் ணோடும் இந்திய நாட்டு மண்ணிலிருந்தே பிடுங்கி எறிந்திட வேண்டும் என்பதையும் குறிப்பதாகும்.

வெல்க இந்தியா என்பது பிஜேபிக்கு எதிராக நாடு முழுவதும், தமிழ் நாட்டிலும் 'இந்தியா' கூட்டணியை வெற்றி பெறச் செய்திட வேண்டும் எனப் பொருளாகும். அது நமது உடனடி கடமை. அதற்காக நம்மாலான அனைத்தையும் செய்திட வேண்டும். ஆனால், அது அத்தோடு முடிந்து போவதல்ல. இந்திய மக்களை புறந்தள்ளி விட்டால் இந்தியா என்கிற வார்த்தையே பொருளற்றதாகி விடும். எனவே, 'வெல்க இந்தியா' என்பது வெல்க 'இந்திய மக்கள்' என்று பொருளாகும். வெல்க இந்திய ஜனநாயகம் எனப் பொருளாகும். வெல்க இந்திய நாடாளுமன்ற முறை' எனப் பொருளாகும். வெல்க இந்திய மக்களின் சமத்துவத்துக்கான போர், வெல்க இந்திய மக்களின் சமூக நீதிக்கான போர், வெல்க இந்திய மக்களின் சுயமரியாதைப் போர் என்று பொருளாகும். இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் காக்கப்பட வேண்டும் என பொருளாகும்.

அதனால்தான், சிபிஐஎம்எல் கட்சி, குடியரசு நாளான ஜனவரி 26 துவங்கி, இந்து-முஸ்லிம் நல்லிணக்கத்தை உயர்த்திப் பிடித்த காந்தி, மதவெறி ஆர்எஸ்எஸ்ஸைச் சார்ந்த கோட்சேவால் கொல்லப்பட்ட ஜனவரி 30 வரை நாடு தழுவியதோர் பரப்புரை இயக்கத்தை, ஜனநாயகம் காத்திட, அரசமைப்புச் சட்டத்தைக் காத்திட சூளுரைக்கும் இயக்கத்தை நடத்திட அறைகூவல் விடுத்திருக்கிறது.

அந்த நாடு தழுவிய இயக்கத்தின் ஒரு பகுதியாக, 'வீழ்க பாசிசம், வெல்க இந்தியா' என போர்ப்பறை முழங்கி, தஞ்சைத் தரணியிலே பிப்ரவரி 1 அன்று, ஒரு மாபெரும் பேரணி நடத்திட தமிழ் நாட்டில் அறைகூவல் விடுத்திருக்கிறது சிபிஐ எம்எல் கட்சி.

அந்தப் பேரணியில் சிபிஐஎம்எல் கட்சியின் அகில இந்திய பொதுச் செயலாளர் தோழர் திபங்கர் அவர்கள் பங்கேற்கிறார். 'இந்தியா' கூட்டணி கட்சித் தலைவர்கள் பங்கேற்கிறார்கள்.

அயார்லா (அனைத்திந்திய விவசாய கிராமப்புற தொழிலாளர் சங்கம்), ஏஐசிசிடியு (அகில இந்திய தொழிற்சங்க மைய கவுன்சில்), ஏஐகேஎம் (அகில இந்திய விவசாயிகள் மகா சபை, அய்சா (அகில இந்திய மாணவர் கழகம்), ஆர்ஒய்ஏ (புரட்சிகர இளைஞர் கழகம்), அய்ப்வா (அகில இந்திய முற்போக்கு பெண்கள் கழகம்) உள்ளிட்ட வெகு மக்கள் அமைப்புகளைச் சார்ந்த தலைவர்களும் பொதுமக்களும் பெருந்திரளாக பங்கேற்கிறார்கள்.

தமிழ் நாட்டிலுள்ள 'இந்தியா' கூட்டணி கட்சித் தலைவர்கள் அனைவரும் பங்கேற்கும் அந்தப் பேரணிக்கு சிபிஐஎம்எல் கட்சி தோழர்கள் மட்டுமல்ல, தமிழ்நாட்டின் தொழிலாளர் வர்க்கம், விவசாயத் தொழிலாளர்கள், விவசாயிகள், உழைக்கும் மக்கள், ஜனநாயகம் படைக்க விழையும் நண்பர்கள், முற்போக்காளர்கள், பெரியார் உணர்வாளர்கள், அம்பேத்கர் உணர்வாளர்கள் அத்தனை பேரும் கலந்து கொள்ள வேண்டும் என விழைந்து, அவர்கள் அத்தனை பேரையும் பாசிச எதிர்ப்புப் போராட்ட இயக்கத்தில், பேரணியில், பங்கேற்க சிபிஐஎம்எல் கட்சி அறைகூவி அழைக்கிறது.

பிப்ரவரி 1 பாசிச எதிர்ப்புப் பேரணி, 'வீழ்க பாசிசம், வெல்க இந்தியா' என அறைகூவல் விடுக்கும் பேரணி! ஆர்எஸ்எஸ்–பிஜேபியின் இந்து ராஷ்டிர கனவுகளைத் தகர்த்தெறிந்திட அறைகூவல் விடுக்கும் பேரணி!

இந்தியா எம் நாடு. தமிழ் நாடு எங்களுடையது. அது, கார்ப்பரேட் முதலாளிகளுக்கு சொந்தமானது அல்ல, மத வெறியர்களுக்குச் சொந்தமானது அல்ல, மனுஸ்மிருதி வெறியர்களுக்குச் சொந்தமானது அல்ல, இந்திய நாட்டு மக்களுக்குச் சொந்தமானது, கோடானுகோடி உழைக்கும் மக்களுக்குச் சொந்த மானது, ஜனநாயகத்துக்காக, சமத்துவத்துக்காக, சமூக நீதிக்காகப் போராடும் மக்களுக்குச் சொந்த மானது என அறைகூவல் விடுக்கும் பேரணி!

**அனைவரும் வாருங்கள்!**

தமிழ் நாட்டில் பாசிச எதிர்ப்புப் போராட்டத்தை வலுப்படுத்துவோம், வாருங்கள்!

தமிழ் நாட்டில் பாசிசக் கருத்துக்களுக்கு சாவு மணி அடித்திடுவோம், வாருங்கள்!

பிப்ரவரி 1 பாசிச எதிர்ப்புப் பேரணியை மகத்தான வெற்றி பெறச் செய்வோம், வாருங்கள்!

**இகக(மாலெ)விடுதலை**
**தமிழ்நாடு மாநிலக் குழு**



## தோழர் தொல்.திருமாவளவன் நேர்காணல்–2

**(நவம்பர் புரட்சி தினத்தை முன்னிட்டு மாலெ தீப்பொறி பத்திரிகை ஆசிரியர் ஜி.ரமேஷ் மற்றும் தீப்பொறி பத்திரிகைக் குழுவினர் தோழர் பாலசுந்தரம், தோழர் ரஞ்சனி, தோழர் ஜோஸ்வா ஆகியோர் சந்தித்துப் பேசிய உரையாடலின் இரண்டாம் பகுதி)**

# மணிப்பூர் வன்முறைக்கு பிஜேபி–ஆர்எஸ்எஸ் அரசியல் சித்து விளையாட்டுகளே காரணம்

– சென்ற இதழ் தொடர்ச்சி



**மணிப்பூர் வன்முறை, கலவரம் இன்னும் தொடர்கிறது. மிசோரத்திலும் கூட எதிரொலிக் கிறது. மணிப்பூர் சென்றுவந்த "இந்தியா கூட்டணியின்" நாடாளுமன்ற குழு உறுப்பினர் என்ற அடிப்படையில் அங்குள்ள நிலமைகள் பற்றி மாலெ தீப்பொறி வாசகர்களுடன் பகிர்ந்து கொள்ள முடியுமா?**

இந்திய அரசியல் களத்தில், மிகவும் முக்கியத் துவம் வாய்ந்த ஒன்றாக இந்தியா கூட்டணி பார்க்கப் படுகிறது. இதில், விடுதலை சிறுத்தைகள் கட்சி இடம்பெற்றிருக்கிறது. தோழர் திபங்கர் தலைமை யிலான சிபிஐ எம்எல் உள்ளிட்ட 28 கட்சிகள் இடம்பெற்றுள்ளன. அந்த இந்தியா கூட்டணியின் சார்பில் மணிப்பூருக்குச் செல்ல நாடாளுமன்ற உறுப்பினர்கள் என்ற முறையில் எனக்கும் கட்சியின் பொதுச்செயலாளர் தோழர் ரவிக்குமார் அவர்க ளுக்கும் வாய்ப்பு கிட்டியது.

நாங்கள் முதலில் இம்பாலுக்குச் சென்றோம். அங்கிருந்து சுராச்சந்த்பூர் என்கிற மலை மாவட்டத் துக்குச் சென்றோம். அந்த பகுதியில் குக்கி மற்றும் நாகா சமூகத்தைச் சார்ந்த மக்கள்தான் பெரும்பான்மை யாக இருக்கிறார்கள். பல்லாயிரக் கணக்கான மக்கள் அகதிகளாக, அரசு கட்டிடங்களில் பள்ளி, கல்லூரி களில் தங்க வைக்கப்பட்டிருக்கிறார்கள். பெண்கள் ஏராளமானோர் அகதிகளாக வீடுகளை இழந்து, உறவுகளை இழந்து, சொத்துகளை இழந்து கட்டிய ஆடைகளோடு வந்து மாதக் கணக்கிலே தங்கி இருக்கிறார்கள். ஈழத்துக்குச் சென்ற போது நான் அகதிகள் முகாமில் தங்கி இருந்த தமிழர்களை சந்தித்தபோது என்ன மாதிரியான உணர்வைப் பெற்றேனோ; துக்கத்திற்கும் துயரத்திற்கும் ஆளா னேனோ அதேபோன்ற உணர்வுதான் மணிப்பூரி லும் ஏற்பட்டது. இங்கே இருக்கிற அரசாங்கம் மெய்தி மக்களுக்கு ஆதரவாக இருக்கிறது. அரசாங்கமும் காவல்துறையும் குக்கி பழங்குடி மக்களுக்கு எதிராகவே இருக்கிறார்கள். ஏராளமான குக்கி இனமக்கள் படுகொலை செய்யப்பட்டிருக் கிறார்கள் என்று அந்த அகதி முகாமிலே தங்கி இருந்தவர்கள் அவர்கள் மொழியில் எடுத்துச் சொன்னார்கள். ராணுவத்திலிருந்த ஒரு குடும்பம் பாதிக்கப்பட்டதை ஊடகத்திலே நாம் பார்த்தோம். அந்த குடும்பத்தை அங்கு சந்தித்தோம்.

குறிப்பாக, முழுமையாக ஆடைகளை களைந்து அவமானப்படுத்தப்பட்ட பெண்மணியை, நம்மு டைய இந்தியா கூட்டணியில் இருந்த பெண் எம்பிக்கள் சந்தித்தார்கள். இந்திய மண்ணில் இருப்பவர்கள் சாதியின் பெயரால் மதத்தின் பெயரால் கொடுமைக்கு உள்ளாக்கப்படுவதும் சொந்த மண்ணிலேயே அகதிகளாக்கப்படுவதும் காலம் காலமாக தொடர்கிறது. தமிழ்நாட்டில் மட்டுமல்ல இந்தியா முழுவதும், மணிப்பூரில் மட்டுமல்ல இந்தியா முழுவதும் தலித்துகள் இதுபோன்ற வன்கொடுமைகளால் ஊரு விட்டு ஊரு, மாவட்டம் விட்டு மாவட்டம் புலம்பெயர்ந்து செல்லக்கூடிய கொடுமைகள் நடந்து வருகின்றன. எப்போதும் போல் அதிகார வர்க்கம் எளிய மக்களுக்கு எதிராகவே இருக்கிறது. காவல்துறை, வருவாய்த்துறை,

ஆட்சியாளர்கள் இவர்கள் ஆதிக்கம் செலுத்தக்கூடிய பிரிவினர்களுக்கு ஆதரவாக இருக்கின்றனர். அதிகாரத்தோடு தொடர்பில்லாத எளிய மக்களுக்கு எதிராக இருப்பதும் அதிகாரவர்க்கத்தின் ஒரு பண்புக்கூறாகவே இருந்து வருகிறது. அதைத்தான் மணிப்பூரிலும் பார்க்க முடிந்தது. சுராசந்த்பூர் மாவட்டத்தின் ஒரு குறிப்பிட்ட நகரத்திற்கு நாங்கள் போயிருந்தபொழுது அந்த நகரத்தின் பல இடங்களிலே எழுதப்பட்டிருந்த வாசகங்கள் பற்றிக் கேட்டோம். இது எங்கள் மண். இங்கே மெய்தி களுக்கு இடமில்லை என்று பல வாசகங்கள் எழுதப் பட்டிருந்தன. அடுத்து, சுராஜ்சந்த் என்ற மெய்தி சமூகத்தைச் சேர்ந்த ஒரு மன்னரின் பெயரை அழித்துவிட்டு வேறு பெயரை எழுதிப் போட்டி ருக்கிறார்கள். கல்லூரி மாணவர்களை பல இடங்களில் சந்தித்தோம். அவர் பனியன்களிலே ‘இது எங்கள் மண் எங்கள் நாடு’ என்ற பொருளில் முழக்கங்கள் எழுதப்பட்டிருந்தன. நீண்ட நெடுங் காலமாகவே அது ஒரு விடுதலைப் போராட்டமாக நடந்து கொண்டே இருக்கிறது. விடுதலை இயக்கம் இயங்கிக் கொண்டே இருக்கிறது என்பதை அறிய முடிந்தது. மாணவர் இயக்கமும் அதில் தீவிரமாக இயங்கிக் கொண்டிருக்கிறது. அடிப்படையிலேயே குக்கி மக்கள் பழங்குடி இனத்தவர்கள். மதம் என்று பார்க்கிற பொழுது கிறிஸ்தவர்கள். ஆர்எஸ்எஸ்–பிஜேபி உள்ளே அடி எடுத்து வைப்பதற்கு முன்பு, பல்வேறு முரண்கள் இருந்தாலும் கூட, குக்கி –மெய்தி மக்கள் அண்ணன், தம்பிகளாகவே இருந்து வந்துள்ளார்கள். இம்பால் பள்ளத்தாக்கிலே மெய்தி மக்கள் இருக்கிறார்கள். ஒட்டு மொத்த மணிப்பூரிலே 10%தான் பள்ளத்தாக்கு, 90% மலைப்பகுதி. மலைப்பகுதியிலேயே வடபகுதியில் இருப்பவர்கள் நாகா. தென் பகுதியில் இருப்பவர்கள் குக்கி. அவர்கள் கிட்டத்தட்ட 40 லிருந்து 42% சதவீதம் வரை இருக்கிறார்கள். கொஞ்சம் இந்துக்களும் இருக்கி றார்கள். எட்டு சதவீதம் முஸ்லிம்களும் உள்ளனர்.

நாங்கள் தங்கி இருந்த இடத்திற்கு எல்லா இயக்கங்களைச் சார்ந்த தலைவர்களும் வந்து எங்களைப் பார்த்தார்கள். எஸ்சி சங்கத்தைச் சார்ந்தவர்களும் எங்களை வந்து பார்த்தார்கள். இவர்கள் 3% க்குமேல் இருக்கிறார்கள். நாங்கள் இந்து இல்லை நாங்கள் சனமாகி மதத்தைப் பின்பற்றக் கூடியவர்கள். குலதெய்வத்தை வழிபடுபவர்கள். எங்களுக்கும் மெய்தி மக்களுக்கும் எந்த சம்பந்தமும் கிடையாது. குக்கி இன மக்களுக்கும் எங்களுக்கும் எந்த சம்பந்தம் இல்லை என்று சொன்னார்கள். ஆனால், அவர்கள் மெய்தி மக்கள் சொல்ற கருத்தைத்தான் சொல்கிறார்கள். இந்த மலைப் பிரதேசத்தில் நிறைய ஆக்கிரமிப்பாளர்கள் வந்து குடியேறி இருக்கிறார்கள். இவர்கள் மியான்மர் பகுதியில் இருந்து வந்து குடியேறியவர்கள். அவர்கள் சட்ட விரோத தொழில்களில் ஈடுபடு கிறார்கள். அவர்கள் பார்த்தி என்று சொல்லக்கூடிய கஞ்சாச் செடிகளை பயிரிடுகிறார்கள். அவர்களைத் தான் வெளியேற்ற சொல்லி போராடுகிறார்கள் என்று கருத்து கூறினார்கள். குக்கி சமூகத்தை சார்ந்த மக்கள் என்ன சொல்றாங்கன்னா; இது எங்கள் மண், எங்கள் மண்ணை நாங்கள் தான் ஆளவேண்டும். எங்கள் மண்ணில் யாரும் நுழையக்கூடாது, ஆக்கிரமிக்கக் கூடாது என்று கூறுகிறார்கள்.

மார்ச், ஏப்ரல் அந்தக் காலகட்டத்தில் இம்பால் பள்ளத்தாக்கிலே தங்கிப் படிக்கிற, வேலை செய்கிற குக்கி இன மாணவர்கள் தாக்கப்படுகின்றனர். மெய்தி மக்களையும் பழங்குடி மக்களாக அறிவிக்க வேண்டும் என்ற கோரிக்கைக்கு ஆதரவாக, அங்குள்ள உயர்நீதிமன்றம் இதற்கு ஒரு தீர்ப்பை வழங்கியிருக்கிறது. மெய்திக்கள் இந்துக்கள் ஆதிக்க சாதியை சார்ந்தவர்கள். அரசுத் துறைகளில் எல்லா அதிகார வர்க்கத்தையும் அவர்கள்தான் மேலாதிக்கம் செலுத்துகிறார்கள். பொருளாதார ரீதியாக மிகவும் வளம் பெற்றவர்கள். இப்படிப்பட்டவர்களை ஏன் பழங்குடி மக்கள் என்று அறிவிக்க வேண்டும் என்ற எதிர்ப்புக் குரல், போராட்டமாக மாறுகிறது. இந்தநிலையில், அங்குள்ள உயர்நீதிமன்றம் மாநில அரசாங்கத்துக்கு ஒரு காலக்கெடு கொடுத்து அந்த மக்கள் கோரிக்கைகள் சம்பந்தமாக உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தீர்ப்பளிக் கிறது. அந்த தீர்ப்பை எதிர்த்து குக்கி சமூகத்தினர் பேரணி நடத்தினர். அந்த பேரணியில்தான் மே மாதத்தில் வன்முறை ஏவப்படுகிறது . இவ்வாறுதான் அங்கு வன்முறை வெடித்தது.

அங்கு இருக்கக்கூடிய ஆளுநர், முதல்வர் உள்ளிட்ட எல்லாருமே மெய்தி மக்களுக்கு ஆதரவாக செயல்படுகிறார்கள் என்று கருதப்ப டுகிறது. இதற்கு காரணம், ஆர்எஸ்எஸ்–பிஜேபி குறிப்பாக மோடி–அமித்ஷா இவர்களெல்லாம் மெய்தி மக்களுக்கு ஆதரவாக இருக்கிறார்கள் என்பதுதான். மிகவும் பாதிக்கப்பட்டிருந்த சுராசந்த்பூர் மாவட் டத்தில் முதல்வரோ, ஆளுநரோ யாரும் அவர்களைப் போய் பார்க்கவில்லை. அதைவிடக் கொடுமை, அகதி

முகாம்களில் தங்கி இருக்கிற மக்களுக்கு பல்வேறு தொண்டு அமைப்புகள்தான் உதவி செய்கின்றன. ஆடை, உணவு, குடிநீர், குழந்தைகளுக்கான பால், மருந்து என 80 சதவீதத்திற்கு மேல் தொண்டு அமைப்பினர்தான் உதவுகிறார்கள். பிறகு நாங்கள் ஹெலிகாப்டரில் ஏறி, மெய்தி மக்கள் அகதிகளாக தங்கி இருக்கிற ஒரு பகுதிக்குச் சென்றோம். அங்குள்ள பெண்கள் கூச்சல் போட்டார்கள். நீங்கள் எங்களை கடந்துதான் சுராசந்த்பூர் பகுதிக்குச் செல்ல வேண்டும். ஏன் எங்களை முதலில் பார்க்கவில்லை? ஏன் இந்த பாகுபாடு? அவர்களை முன்னமே பார்த்துவிட்டு பிறகு எங்களை பார்க்க வருகிறீர்கள், ஏன்? நாங்களும் கடுமையாக பாதிக்கப் பட்டு இருக்கிறோம். நீங்களெல்லாம் குக்கி இன பழங்குடி மக்களுக்கு ஆதரவாகப் பேசுகிறீர்கள். நாங்கள் எவ்வளவு அதிகமாக பாதிக்கப்பட்டிருக் கிறோம் என்பது தெரியுமா எனக்கேட்டு தங்கள் கருத்துகளை பதிவு செய்தார்கள்.

மெய்தி மக்கள் ஒரு கல்லூரியில் தங்கியிருக் கிறார்கள். ஒரு மாதமாக இருப்பதாகச் சொன்னார்கள். அரசாங்கம் உங்களுக்கு ஏதாவது உதவி செய்கிறதா? உணவு, உடை, மருந்து, பால்கொடுக்கிறார்களா? எனக்கேட்டோம். எதுவுமே இல்லை. நிறைய இளம் பெண்கள் கல்லூரிகளுக்குச் செல்கிறார்கள். அவர்க ளுக்கு நாப்கின் கொடுக்கப்படவில்லை. தண்ணீரு டன் கூடிய கழிப்பறை வசதி இல்லை. மின் விளக்குகள் இல்லை. அவர்களை, ஒரு இருட்டுப் பகுதியில்தான் சந்தித்தோம். உணவு மட்டும் அந்தந்த நேரத்திற்கு வந்து கொடுக்கிறார்கள். அங்கேயும் கிட்டத்தட்ட தொண்டு அமைப்புகள் தான் உதவி செய்கிறார்கள்.

இதையெல்லாம் பார்த்து விட்டு அடுத்த நாள், இம்பாலில் ஆளுநரைப் பார்த்தோம். அவர்கள் ரொம்ப மரியாதையாக வரவேற்பு கொடுத்தார்கள், பேசினார்கள். கோரிக்கைகளை எல்லாம் கேட்டுக் கொண்டார்கள். நீங்கள் பிரதமரிடம் எடுத்துச் சொல்ல வேண்டும். உடனடியாக பேச்சுவார்த்தை நடத்த வேண்டும். சுமூமான முடிவு எடுக்க முயற்சி செய்ய வேண்டுமென்று சொன்னோம். வழக்கம்போல கேட்டுக்கொண்டார். அதனால் எந்த பயனும் விளையவில்லை.இதுநாள் வரையிலும் மோதலும் வன்முறையும் தொடர்கிறது. குக்கி, நாகா இன மக்கள் கடுமையாக பாதிக்கப்படும் நிலையில் இருக்கி றார்கள். ரொம்ப முக்கியமா, அந்த கஞ்சாச் செடி வளர்ப்பு அதனால் ஏற்படக்கூடிய வணிகம் இதை குறி வைத்துதான் மெய்தி இன மக்கள் ஆக்கிரமிப்பு செய்ய வேண்டும். அந்த வணிகத்தைக் கைப்பற்ற வேண்டும். அந்த நிலங்களை வாங்க வேண்டும் அப்படிப்பட்ட வேட்கையுடன் தான் பிரச்சனைகளை கையாள்கிறார்கள். பழங்குடி அந்தஸ்து கேட்கி றார்கள். ஏனெனில், பழங்குடி மக்கள்தான் மலைப் பகுதியில் நிலம் வாங்க முடியும். இவங்க பழங்குடி யில்லை என்பதால் அங்கு நிலம் வாங்க முடியல. எனவேதான், அவர்கள் தங்களை பழங்குடி மக்கள் என அறிவிக்கச் சொல்லிக் கேட்கிறார்கள். ஒட்டு மொத்தமாக பார்த்தால், அவர்களுக்கு இடையில் இந்து, கிறிஸ்தவர்கள் முரண்பாட்டால் இது பெரி தாக வெடித்தமாதிரி தெரியவில்லை. ஆர்எஸ்எஸ் உள்ளே புகுந்து, வழக்கம்போல மத அடிப்படையி லான வேறுபாட்டை அவர்களுக்கிடையே உரு வாக்கி, இந்துக்களை தங்கள் பக்கம் திருப்பும் முயற்சியில் அவர்களுக்கிடையில் முரண்பாடுகளை விதைத்துவருகிறார்கள். வளம் கொழிக்கும் அந்த மலைப்பகுதியில், மெய்தி மக்களை விடவும் மற்றவர்கள் அங்கு நிலம் வாங்க வேண்டும்; முதலீடு செய்ய வேண்டும் என்று ஆர்எஸ்எஸ் இயக்கத்தைச் சார்ந்தவர்கள் விரும்புகிறார்கள்.

ஜம்மு காஷ்மீரில் அதைத்தான் சொல்கிறார்கள். மற்ற பகுதியைச் சேர்ந்தவர்கள் அங்கு நிலம் வாங்க முடியாது. இப்ப அதை உடைத்து விட்டு விட்டார்கள்; எல்லா கதவுகளையும் திறந்து விட்டார்கள் அம்பானியும் அதானியும் அங்கு நிலங்களை வாங்கலாம்; தொழில் தொடங்கலாம். கார்ப்பரேட்டு களுக்காக காஷ்மீர் திறந்துவிடப்பட்டுள்ளது. மணிப்பூரிலும் இந்த மாதிரியான நோக்கங்கள் இருக்கலாம் என்பது மக்களிடம் பேசும்போது தெரிய வருகிறது. இது, முழுக்க முழுக்க இந்திய அரசாங் கத்தின் அரசியல் சித்து விளையாட்டுகளாலேயே உருவாகியுள்ளது. மணிப்பூர் மக்கள் பாதிக்கப்படு வதற்கு அங்கு ஏற்கனவே உள்ள முரண்கள் மட்டும் காரணம் இல்லை. இந்திய அரசு முன்வைக்கிற அரசியல் முரண்களும் முக்கிய காரணங்களாக உள்ளன.

**ஆகஸ்ட் மாதம், சிபிஐ எம்எல், அகில இந்திய முற்போக்கு பெண்கள் கழகம், நீதிக்கான வழக்கறிஞர் சங்கம் உள்ளிட்ட அமைப்புகள் மணிப்பூர் சென்றிருந்தன. மோடி அரசாங்கமும் அங்கு உள்ள மாநில அரசாங்கமும் இரட்டை என்ஜின் அரசாங்கம்தான் காரணம் என்று பலரும் சொன்னார்கள். இங்குள்ள நிலமைகள்,**

## எந்த அளவு மிசோரத்தில் எதிரொலிக்கும் என்று நினைக்கிறீர்கள்?

வடகிழக்குப் பகுதிகள், ஒரு காலத்தில் பிஜேபி என்று சொல்லிக் கொள்வதற்கு கூட ஆளில்லாமல் இருந்த பகுதி. 10 ஆண்டுகளில் அவர்கள் வளர்ச்சி பெற்றுள்ளனர். அவர்கள் விதைத்த வெறுப்பு அரசியல் மூலம் வடகிழக்கு மாநிலங்களில் பிஜேபி இந்த அளவுக்கு செல்வாக்கு பெற முடிந்திருக்கிறது, ஆட்சி அமைக்க முடிகிறது என்றால் மிகப்பெரிய அதிர்ச்சிதான். மிசோரத்திலும் இந்த செல்வாக்கு இருக்குமென்றே தெரிகிறது. காங்கிரஸ் கோலோச்சிய இடங்களில், கம்யூனிஸ்டுகள் செல்வாக்கோடிருந்த இடங்களில் கூட, அவர்களையெல்லாம் பின்னுக்குத் தள்ளிவிட்டு பிஜேபி முன்னுக்கு வந்திருக்கிறது. இதெல்லாம் ஆர்எஸ்எஸ் அமைப்பிற்கு கிடைத்த வெற்றியாகத்தான் பார்க்கவேண்டி இருக்கிறது இடதுசாரிகள், இதர ஜனநாயக சக்திகள் வடகிழக்கு மாநிலங்களில் ஏற்பட்டுள்ள அரசியல் மாற்றங் களை, பண்பு மாற்றங்களை ரொம்ப தீவிரமாக கவனத்தில் எடுத்துக் கொண்டாக வேண்டும். ஏனெனில், இதே உத்தியைத்தான், ஆர்எஸ்எஸ் –பாஜக எல்லா மாநிலங்களிலும் பின்பற்றுகிறது. உபியில், 80% முஸ்லிம்கள் இருக்கும் நாடாளுமன்ற தொகுதியிலேயே பிஜேபி ஜெயிக்கிறதென்றால் இதெல்லாம் ஒரு மேஜிக் மாதிரி தெரிகிறது. அதே போல, பெரும்பான்மையாக கிறித்துவர்கள் இருக்கும் தொகுதியிலேயும் பிஜேபி வெற்றி பெறமுடிகிறது.

மணிப்பூரில் கூட, மலைப்பகுதியில் முழுவதும் இருக்கிற கிறிஸ்தவர்கள் பிஜேபிக்கு ஓட்டு போடுகிறார்கள். குக்கி இன மக்கள் மத்தியிலிருந்து பிஜேபி எம்எல்ஏக்கள் இருக்கிறார்கள். வட இந்திய மாநிலங்களில் குறிப்பாக இந்தியாவின் வடக்கு, வடகிழக்கு மாநிலங்களில் பிஜேபியை ஒரு சராசரி அரசியல் கட்சியாக பார்க்கிற பார்வை உள்ளது. தமிழ்நாட்டில் அதை ஒரு மதவெறி இயக்கமாக, சமூக விரோத, வலதுசாரி இயக்கமாக பார்ப்பது போன்ற பார்வை வடக்குப் பகுதியில் இல்லை என்பது மிகவும் அதிர்ச்சியாக இருக்கிறது. பிஜேபியை காங்கிரஸ் எதிர்க்கிறது. ஆனாலும் அதை தேர்தல் கோணத்தில் தான் பார்க்கிறார்கள். அடிப்படையில் வெறுப்பு அரசியலை விதைக்கிற கருத்தியல் எதிராளி என்ற அடிப்படையில் (பிஜேபியை) வீழ்த்த வேண்டும் என்று நினைப்பதாகத் தெரியவில்லை. அதை ஒரு சனாதன இயக்கமாக பார்க்கிற பார்வை அதனிடம் இல்லை. காங்கிரசுக்கு, பிஜேபி எதிர்ப்பு என்ற அளவிலேயே எண்ணுகிறது. எப்படி திமுகவுக்கு அதிமுக எதிர்ப்பு, அதிமுகவுக்கு திமுக (தேர்தலில்) எதிர்ப்பு என்று பார்க்கப்படுகிறதோ அதுபோலதான், பிஜேபியை காங்கிரசுக்கு எதிரான ஒரு தேர்தல் இயக்கம் என்று பார்க்கிற பார்வை (காங்கிரசுக்கு) இருக்கிறது. அதைக் கடந்தும் பார்க்கவேண்டிய தேவை இருக்கிறது.

ராகுல் காந்தி, சோனியா காந்தியிடம் இந்த பார்வை (vision) இருக்கிறது. ஒரு சில முன்னணித் தலைவர்கள் கருத்தியல் அடிப்படையில் பார்க்கி றார்கள். ஆனால் ஒட்டு மொத்தமாக அந்தக் கட்சியிலுள்ளவர்கள் அப்படிப் பார்க்கிறார்களா என்றால் நிச்சயமா இல்லை என்றுதான் சொல்ல முடியும். அதனால்தான், வட இந்திய மாநிலங்களில் உள்ள தலித்துகள், பழங்குடி மக்கள் கூட பிஜேபியை ஆகா! ஓகோ! என்று தூக்கி வைத்துக் கொண்டாடுகிறார்கள். ஆர்எஸ்எஸ்–ல் இருப்பதை பெருமையாகப் பேசுகிறார்கள். இது பெரிய அதிர்ச்சி யாக இருக்கிறது. அம்பேத்கரையும் தங்களது தலைவர் என்று சொல்கிறார்கள்; பிஜேபியையும் தன்னுடைய இயக்கம் என்று சொல்லுகிறார்களே! இது எப்படி என்று தோன்றுகிறது? தமிழ்நாட்டுப் பார்வையில் இருந்து பார்க்கிற பொழுது இது அதிர்ச்சியாக இருக்கிறது. நான் முன்பே சொன்னது போல, காங்கிரஸில் இருப்பவர்கள் பிஜேபியை ஒரு தேர்தல் எதிராளியாய் பார்க்கிறார்களே தவிர ஒரு கருத்தியல் எதிராளியாய் பார்க்கிறார்களா என்பது, கேள்விக்குறியாகத்தான் இருக்கிறது. இந்த அடிப் படையில் பார்க்கும்போது, முன்பு காங்கிரசுக்கு ஓட்டு போட்ட மாதிரி, மக்கள் இப்போது பிஜேபிக்கு ஓட்டு போடுகிறார்கள். முஸ்லீம்களுக்கு எதிராக அரசியல் வெறுப்பை விதைத்தாலும் கிறிஸ்தவர்களுக்கு எதிராக அரசியல் வெறுப்புப் பேச்சு பேசினாலும் அதே முஸ்லிம் சமூகத்தில் இருந்தும் கிறிஸ்தவ சமூகத்தில் இருந்தும் பிஜேபிக்கு வாக்களிக்கக் கூடியவர்கள் இருக்கிறார்கள் என்பதை களத்தில் சென்று பார்க்கிறபோது நமக்கு அதிர்ச்சியாக இருக்கிறது. பயத்தின் காரணமாக பிஜேபிக்கு வாக்களிக்கிறார்கள் என்றும் கூறி விட முடியாது. அப்படி வாக்களிக்கிறவர்கள் மிக மிகக் குறைவான வர்களாகவே இருப்பார்கள். எனவே மிசோரத்திலும் பிஜேபினுடைய தாக்கத்தை நாம் குறைத்து மதிப்பிட முடியாது. அங்கேயும் கூட இந்த முரண்கள் விரிவடையலாம்; வன்முறைகளும் வெடிக்கலாம்.

இந்தியா கூட்டணி பற்றி...

அடுத்த இதழில்...

# ஜெர்மன் நாஜிசமும் சங் பரிவார பாசிசமும்

எஸ்.வி.ராஜதுரை

பல்வேறு நாடுகளிலுமுள்ள பாசிசங்கள் அனைத்தும் ஜெர்மானிய நாஜிசத்தைத் தம் முன்மாதியாகக் கொண்டிருந்தாலும் அதன் முழு அச்சு வார்ப்பாக இந்திய பாசிசம் மட்டுமே இருப்பதாகக் கருதலாம்.

அவற்றின் ஒத்த தன்மைகளை இங்கு பார்ப்போம்:

**1. ஜெர்மன் நாஜிகள் ஆரிய இனத்தின் மேன்மையை நிறுவ முயன்றனர்.** இந்திய நாஜிகளான சங் பரிவாரத்தினரோ 'இந்துக்களின் மேன்மை' என்ற பெயரில் பார்ப்பனர்களின் மேலாண்மையை முழுமையாக நிறுவப் பாடுபட்டுக் கொண்டிருக்கின்றனர். இதன் பொருட்டு 'ஆரியர்கள் வெளிநாட்டிலிருந்து வந்தவர்களல்லர், மாறாக இந்தியாவின் பழங்குடிகள்' என்ற கருத்தை நிறுவுவதற்காக தங்கள் வழக்கமான பொய் மூட்டைகளை அவிழ்த்து விடுகின்றனர். அந்த மூட்டைகளிலிருந்து வெளிவந்த சில இந்தியப் பார்ப்பன 'ஆராய்ச்சியாளர்களும்', சங் பரிவாரத்தின் மீது மோகம் கொண்டுள்ள ஓரிரு வெளிநாட்டு 'ஆராய்ச்சியாளர்களும்', ஆரியர்கள் தான் சிந்துவெளி நாகரிகத்தைக் கட்டமைத்தனர் என்று மெய்ப்பிப்பதற்காகக் களமிறங்கினர். அதாவது அவர்களது ஆராய்ச்சிக் களம் என்பது கணினியும் கணினித் தொழில் நுட்பமும்தான்! அவற்றைக் கொண்டு சிந்துவெளி நாகரித்தில் காணப்படும் எருது சின்னத்தை குதிரையாகக் காட்ட முனைந்து படுதோல்வி அடைந்தனர் என்றாலும் ஆரியர்கள் இந்திய மண்ணைச் சேர்ந்தவர்கள்தான் என்பதை 'மெய்ப்பிக்கும்' பல கட்டுரைகளும் நூல்களும் சங் பரிவார 'ஆராய்ச்சி' முகாமிலிருந்து வந்துகொண்டு தான் இருக்கின்றன.

இதில் வேடிக்கை என்னவென்றால், இந்துத்து வத்தின் பிதாமகன் வி.டி.சாவர்க்கர் 1923இல் வெளியிட்ட 'இந்துத்துவா அல்லது இந்துக்கள் யார்? (Hindutva or Who is a Hindu) என்ற நூலில் அவர், ஆரியர்கள் வெளிநாட்டிலிருந்து சிந்து நதிக்கரைப் பகுதிக்கு வந்தனர் என்றும் உலகின் மிகப் பழைமை யான நாகரிகங்களிலொன்று எனச் சொல்லப்படும் பாபிலோனிய நாகரிகம் தோன்றுவதற்கு முன்பே ஆரிய வேத ரிஷிகளின் யாகப் புகைகள் வானை நோக்கி எழுந்து கொண்டிருந்தன என்றும் சிலாகிக் கிறார். வடமேற்கு இந்தியாவிலிருந்து மெல்ல மெல்ல இந்தியாவின் பிற பகுதிகளுக்குச் சென்ற ஆரியர்களோடு சேர்ந்து அவர்களது பண்பாடும் பரவியது என்றும், ஆரியரல்லாத மக்கள் அங்கு இருந்தபோதிலும் அவர்களுக்கும் ஆரியர்களுக்கும் இரத்தக் கலப்பு ஏற்பட்டு இந்து தேசம் உருவாகியது என்றும் சாவர்க்கர் கூறுகிறார். "இந்து பூர்வீகத்துடன் தொடர்புடையவர்கள் அனைவருடனும் தனக்கு இரத்த உறவு இருக்கிறது என்று கருதுபவனும் வடக்கே சிந்து நதி முதல் தெற்கே இந்து மாக்கடல் வரை உள்ள பகுதியே இந்தியா என்று ஒப்புக் கொள் பவனும் இந்தியாவை ஒரு தெய்விக பூமி அல்லது புனித பூமி என்று கருதுபவனுமேதான் இந்து ஆவான்" என்றும், இந்த இந்துக்கள் யாவரும் ஒரே மரபினம் (race) என்றும் இந்த நூலில் கூறுகிறார் சாவர்க்கர்.

சங் பரிவாரத்தின் ஆன்மிகக் குருக்களுக்கும் குருவாகக் கருதப்படும் எம்.எஸ்.கோல்வால்கர், "நாம், அல்லது நமது தேசத்தன்மையை வரைய Á ˆ î ™ (We, or our Nationhood Defined) என்ற நூலில், உலகில் எந்தவொரு மாபெரும் அறிவியலாள ராலும் கண்டுபிடிக்க முடியாத 'அறிவியல் கண்டுபிடிப்பை' முன்வைக்கிறார்: "இந்துக்கள் அல்லது ஆரியர் களாகிய நாம் முதலில் வட துருவப் பிரதேசத்தி லிருந்து வந்தவர்கள் என்ற கோட்பாட்டை லோக்(மான்ய) திலகர் முன்வைத்தார். அதாவது ஆரியர்கள், அதாவது இந்துக்கள் முதலில் வட துருவப் பிரதேசத்தில் இருந்தார்கள் என்று அவர் கூறுவதை நாம் ஒப்புக் கொள்கிறோம். ஆனால், அவருக்குத் தெரியாமல் போனது என்னவென்றால் தொன்மைக் காலத்தில் வட துருவ முனையும் துருவப் பிரதேசமும் இன்றுள்ள இடத்தில் இருந்திருக்க வில்லை என்பதுதான். நாம் அறிந்து கொண்டது என்ன வென்றால் ...வட துருவப் பகுதி ஓரிடத்தில் நிலையாக இருந்ததில்லை; மிக நீண்டகாலத்திற்கு முன்பு அது இன்றைய பிகாரிலும் ஒரிஸ்ஸாவிலும்

இருந்தது; பிறகு வடகிழக்குத் திசை நோக்கிச் சென்றது; அதன் பின்னர் வளைந்து வளைந்து மேற்குத் திசையிலும் வடக்கு திசையிலும் சென்று, இப்போதுள்ள இடத்தை அடைந்தது. அப்படி யானால் நாம் துருவப் பிரதேசத்தை விட்டு இந்துஸ்தானத்துக்கு வந்துவிட்டோமா அல்லது நாம் எப்போதுமே இங்கேதான் இருந்திருக்கிறோமா, துருவப் பிரதேசம்தான் நம்மை விட்டு வளைந்து வளைந்து வட திசை நோக்கிச் சென்றுவிட்டதா? இந்த உண்மை லோக் திலகரின் காலத்திலேயே கண்டு பிடிக்கப்பட்டிருந்தால், வேதங்களில் சொல்லப் படும் துருவப் பிரதேசம் இந்துஸ்தானத்திலேயே இருந்தது, இந்துக்கள் அங்கு புலம் பெயர்ந்து செல்லவில்லை, மாறாக இந்துக்களை இந்துஸ் தானத்தில் விட்டுவிட்டு துருவப் பிரதேசம்தான் வளைந்து வளைந்து வட திசையை நோக்கிப் புலம் பெயர்ந்துவிட்டது என்ற கோட்பாட்டை அவர் தயக்கமின்றி முன்வைத்திருப்பார் என்று நம்மால் தயக்கமின்றி உறுதிப்படுத்த முடியும்"

**2. ஜெர்மன் நாஜிகளின் கருத்துநிலை (ideology):** யூத விரோதத்தையும் யூதர்களை இழிவுபடுத்துவதையும் பின்னர் அவர்களை ஒழித்துக் கட்டுவதையும் நாஜிகள் தங்கள் அரசியல் கொள்கை யாகவும் பரப்புரையாகவும் கொண்டிருந்தனர் (இன்றைய ஜெர்மன் அரசு நவநாஜிகளான இஸ்ரேலிய ஜியோனிஸ்டுகளுடன் கூட்டுச் சேர்ந்துள்ளது என்பது வேறு விடயம்).

இந்திய பாசிசவாதிகளோ இஸ்லாமிய, கிறிஸ்தவ சிறுபான்மையினரை குறிப்பாக இஸ்லாமி யர்களை இழிவுபடுத்துவதையும் முஸ்லிம் விரோதக் கருத்துகளைப் பரப்புவதையும் தங்கள் அரசியல் கொள்கையாகக் கொண்டிருப்பதுடன் அவர்களை முற்றிலுமாக இனக்கொலை செய்வதை நியாயப் படுத்தும் கருத்துகளைப் பரப்பி வருகின்றனர். அதன் பகுதியாக எண்ணற்ற முஸ்லிம்கள் கொல்லப் பட்டுள்ளனர், அவர்களது இல்லங்களும் கட்டடங் களும் புல்டோசர்கள் மூலம் இடித்துத் தள்ளப் பட்டுள்ளன. அவர்களது வணிகங்களும் வணிக மையங்களும் கடைகளும் நிர்மூலமாக்கப்பட்டு வருகின்றன.

**3. ஜெர்மானிய நாஜிகள் கொன்ற விளிம்பு நிலை மக்கள்:** மேற்கு, கிழக்கு ஐரோப்பாவிலிருந்த ரோமாக்கள், ஜிப்ஸிகள் எனப்படும் நாடோடி மக்களைக் கொன்று குவித்தனர்.

இந்திய நாஜிகள் தலித்துகளை அடக்கவும் ஒடுக்கவும் அழிக்கவும் முயன்று கொண்டிருக்கி றார்கள்.

**4. ஹிட்லரின் நாஜி அரசின் குடியுரிமைச் சட்டம்:** ஜெர்மானியக் குடிமக்கள் பட்டியலிலிருந்து யூதர்களை விலக்கி வைத்தது; அவர்களுக்குக் குடியுரிமை வழங்க மறுத்தது.

இந்திய நாஜிகளோ தேசிய மக்கள் பதிவேட்டில் இந்திய முஸ்லிம்களை குடியுரிமை அற்றவர்களாக ஆக்கும் பொருட்டு குடியுரிமைச் சட்டத்திற்குத் திருத்தம் கொண்டு வந்திருக்கிறார்கள். அஸ்ஸாமி லுள்ள இலட்சக்கணக்கான முஸ்லிம்களுக்கு, அவர்கள் அந்த மாநிலத்தில் வாழ்ந்தவர்கள் எனபதற் கான வரலாற்று ஆவணங்கள் இல்லை என்ற காரணம் காட்டி, அவர்களுக்குக் குடியுரிமையை மறுத்துள்ள துடன் பல்லாயிரக்கணக்கான முஸ்லிம்களை சிறை கள் போன்ற முகாம்களில் அடைத்து வைத்துள்ளனர். அதேவேளை வரலாற்று ஆவணங்கள் இல்லாத, அஸ்ஸாமில் குடியேறிகளாக உள்ள பல இலட்சம் இந்துக்களுக்கு அவர்கள் வெளி மாநிலங்களி லிருந்தோ வெளிநாடுகளிருந்தோ வந்தவர்களாக இருந்தாலும் குடியுரிமையை வழங்குகிறார்கள்.

**5. ஜெர்மன் நாஜிகளின் இனத் தூய்மைச் சட்டம்:** நாஜிகள் 'ஜெர்மானியர்களின் இரத்தம், கௌரவம் ஆகியவற்றைப் பாதுகாக்கும் சட்டம்' இயற்றினார்கள்; ஜெர்மானியர்களுக்கும் யூதர்க ளுக்குமிடையே திருமணங்கள் நடப்பதையோ, திருணத்திற்கு வெளியே உறவு கொள்வதையோ தடை செய்தார்கள்.

இந்திய பாசிசவாதிகளோ 'சட்டவிரோதமாக மதமாற்றம் செய்யப்படுவதைத் தடுக்கும் அவசரச் சட்டம் 2020' என்பதை இயற்றினார்கள். அதன் நோக்கம் 'லவ் ஜிஹாத்' என்று அவர்களால் சொல்லப் படுவதைத் தடுப்பதும், இந்துப் பெண்களின் கௌரவத்தைக் காப்பது என்ற பெயரால் இரு மதத்தினரிடையே கலப்புத் திருமணங்கள் நடப் பதைத் தடுப்பதும்தான். அதேவேளை இந்துக்கள் என்று சொல்லப்படுவர்களிடையே நடக்கும் 'ஆணவக் கொலைகளை' தடுக்கும் சட்டத்தைக் கொண்டு வர மறுக்கிறார்கள்.

**6. ஜெர்மானிய நாஜிகளின் உணவுக் கொள்கை:** ஜெர்மன் நாஜிகள் யூதர்கள் இறைச்சிக் காக விலங்குகளை வெட்டும்போது கடைப்படிக்கும் 'கோஷெர்' முறையைத் தடை செய்தனர். அந்த 'கோஷெர்' முறை என்பது, இறைச்சிக்கான விலங் குகளின் கழுத்தை அறுத்து இரத்தம் உடனடியாக

வெளியேறும்படி செய்து, அந்த விலங்குகள் விரைவில் மடியும்படி செய்வதுதான். ஏறத்தாழ இதற்கு ஒத்ததும் இஸ்லாமியர்களால் பின்பற்றப் படுவதுமான 'ஹலால்' முறைக்கு எதிராகப் பரப்புரை செய்தனர்.

இந்திய நாஜிகளோ இஸ்லாமியர்கள் மட்டுமல் லாது, தலித்துகளும் கிறிஸ்தவர்களும் பிற்பட்ட சாதிகளைச் சேர்ந்த பலரும் உண்கின்ற மாட்டிறைச் சியை விற்பதையும் உண்பதையும் தடை செய்கின்ற னர். இறைச்சிக்காக மாடுகளை ஏற்றிச் செல்பவர் களைக் கொடூரமாக வெட்டிக் கொல்கின்றனர். பல இடங்களில் 'ஹலால்' இறைச்சிக் கடைகளை மூடி யுள்ளனர்.

அது மட்டுமல்ல, நாம் கவனம் செலுத்தாத இன்னொரு விஷயமும் உண்டு. அதாவது அவர் களால் புனிதமானதாகக் கருதப்படும் 'பசு'விற்கு நேரிடும் ஏராளமான சித்திரவதைகள்தான். இந்து மேல் சாதியினரும் சமணர்களும் அதிகம் விரும்பி நுகர் கின்ற பசும்பாலுக்காக நடத்தப்படும் பால் பண்ணைத் தொழிலில், தாய்ப் பசு மாடுகள் கன்று களிலிருந்து வலுக்கட்டாயமாகப் பிரிக்கப்படு கின்றன. அவை காளைக் கன்றுகளாக இருதாலும் சரி, பசுக் கன்றுகளாக இருந்தாலும் சரி. தாய்ப் பாலைக் குடிக்க முடியாத ஏராளமான கன்றுகள் இறந்து போகின்றன. தாய்ப் பசுவின் தாய்மை உணர்வுக்கு ஏற்படும் மன வேதனையை அவர்கள் பொருட் படுத்துவதில்லை. ஏனெனில் அவை வாய் பேசாத பிறவிகளல்லவா? மேலும், வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் ஜெர்சி போன்ற பசு மாட்டு வகைகள், நாட்டுப் பசு மாட்டு வகைகள் ஆகிய வற்றின் மூலம் உருவாக்கப்படும் கலப்பினப் பசுக்கள் பல்லாயிரக்கணக்கில் உற்பத்தி செய்யப் படுகின்றன. அவற்றிடமிருந்து அதிக அளவு பாலைக் கறப்பதற்காகவும் செயற்கையாக கரு உண்டாக்கு வதற்காகவும் அவற்றின் ஆயுள்காலத்தைக் குறைக் கின்ற, அவற்றுக்கு சொல்லொணா உடல் துன்பத்தை யும் நோய்களையும் ஏற்படுத்துகின்ற ஊசிகள் செலுத்தப்படுவதை அனுமதிக்கிறார்கள். இவர்கள் தான் 'அனாதை மாடுகளுக்கு' கோசாலை நடத்து பவர்களாம்!

**7. ஜெர்மன் நாஜிகளின் பரப்புரை சாதனங்கள்:** ஜெர்மன் நாஜிகள் கருத்துகளைப் பரப்புவதற்காகவென்றே ஓர் அரசாங்கத் துறையை வைத்திருந்தார்கள். பெரும் கார்ப்பரேட் ஊடகங் களைத் தம் கட்டுபாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

இந்திய நாஜிகளோ, தூர்தர்ஷனையும் இந்திய வானொலியையும் தங்கள் பரப்புரைக் கருவிகளாக ஆக்கியுள்ளதுடன், தங்கள் ஆதரவுடன் நடத்தப் படும் தொலைக்காட்சி சானல்கள் முதலிய ஊடகங்களைப் பயன்படுத்துகிறார்கள். இவை போக, தொழில் ரீதியாகத் தகவல் தொடர்புத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்திப் பொய்ச் செய்திகளைப் பரப்புவதற் கென்றே பாஜக தன் கட்சியில் ஒரு பிரிவை உருவாக்கியுள்ளது. 'கோடி மீடியா' என்று சொல்லப் படும் இந்த ஊடகம்தான் சிறுபான்மையினரை அரக்கர்களாகச் சித்திரிக்கவும் இந்துத்துவத்துக்கு ஆதரவாக பொது மக்கள் கருத்தை உருவாக்குவதற்கும் பயன்படுத்தப்படு கிறது. 'நாட்டெல்லை களைக் கடந்த பத்திரிகை யாளர்கள்' (Reporters Without Borders) என்ற சர்வதேசப் பத்திரிகை யாளர் அமைப்பு, ஊடக சுதந்திரத்தைப் பொருத்த வரை, ஓயாத உள்நாட்டு சண்டைகளும் இனக் கொலைகளும் நடக்கும் சோமாலியா, போதைப் பொருள் வணிகத்தில் தலைசிறந்து விளங்குவதும் போதைப் பொருள் மா.ஃபியாக்கள் ஆதிக்கம் செலுத்துவதுமான கொலம்பியா ஆகிய நாடுக ளுக்குக் கீழே, இந்தியா தர வரிசைப் பட்டியலில் 161ஆம் இடத்திலுள்ளது என்பதைச் சுட்டிக் காட்டியுள்ளது. பாடத்திட்டங்கள் மாற்றப்படு கின்றன, அவற்றில் காந்தியைக் கொலை செய்த வனின் பெயர் மறைக்கப்படுகிறது, மொகலாய மன்னர்கள் மிகவும் இழிவாக சித்திரிக்கப்படு கின்றனர்; ஜெர்மானிய நாஜிசம், இத்தாலிய பாசிசம் ஆகியவற்றைப் புகழ்ந்து தள்ளுவது இந்துத்துவக் கருத்துப் பரப்புரையாளர் களின் முக்கியப் பணியாக உள்ளது. இவ்வாண்டு (2024) வரவிருக்கும் நாடாளுமன்றத் தேர்தல்களில் மோடி அரசின் சாதனைகளைப் புகழ்வதற்காக அரசாங்க உயர் அதிகாரிகளுக்கே பொறுப்புக் கொடுத்துள்ளனர்.

**8. ஜெர்மன் நாஜிகள் பரப்பி வந்த பழங்காலப் பெருமைப் பரப்புரை:** முதலாம் உலகப் போருக்கு (அதில் அது படுதோல்வியடைந்தது) முன்னர் ஜெர்மனிக்கு இருந்த 'புகழை' மீட்டெடுப்ப தற்கு நாஜிகள் முனைந்தனர்.

இந்திய நாஜிகளோ புராணக் கட்டுக்கதைகளை வரலாறாகக் காட்டி, இண்டெர்நெட், பிளாஸ்டிக் அறுவை சிகிச்சை, விண்வெளிப் பயணம் முதலிய எல்லாமே பழங்கால இந்து இந்தியாவில் இருந்த தாகவும், எனவேதான் அந்தப் புகழை மீண்டும்

பெறுவதற்காக இந்து நாகரிகத்தை சிதைத்த அந்நிய மதத்தினரை ஒழிக்க வேண்டும் என்றும் கூறுகின்றனர். ஆனால், இவர்கள் பயன்படுத்தாத மேற்கு நாட்டுத் தொழில் நுட்பம் ஏதும் கிடையாது என்பது தான் உண்மை.

**9. ஜெர்மன் நாஜிகளின் வணிகத் தடைகள்:** யூதர்கள் வணிகம் செய்வதையோ, அவர்களின் கடைகளில் பொருள்களை வாங்குவதையோ தடை செய்ததுடன், யூத மருத்துவர்கள், பொறியியலாளர்கள், வழக்குரைஞர்கள் முதலியோரைப் புறக்கணிக்கும் திட்டத்தை நடைமுறைப் படுத்தினார்கள்.

இந்தியா நாஜிகளோ முஸ்லிம்களின் வணிக நிறுவனங்களை, கடை கண்ணிகளைப் புறக் கணிக்குமாறும் தலித்துகள் மற்றும் சிறுபான்மையினர் ஆகியோர்களைச் சேர்ந்த மருத்துவர்கள், பொறியியிலாளர்கள் முதலியோரைப் புறக்கணிக் கும்படியும் பரப்புரை செய்கிறார்கள்.

**10. ஜெர்மன் நாஜிகளின் தனிமனித 'வீர வழிபாடு':** ஜெர்மன் நாஜிகள் ஹிட்லரை வழிபாட்டுக்குரிய மனிதராக மாற்றினார்கள். அவரை 'அடையாளம் தெரியாமல் வாழ்ந்து கொண்டிருந்த போர் வீரர்' என்றும், ஆனால் அனைத்து வல்லமை படைத்தவர் என்றும் போற்றிப் புகழ்ந்தனர். ஜெர்மனியின் இரட்சகர் அவர் ஒருவரே என்று பரப்புரை செய்தனர்

இந்திய நாஜிகளோ 'சாயா விற்றுக் கொண்டிருந்த' மிக சாமானிய மனிதரான மோடி 56 அங்குல மார்பளவு கொண்ட மாபெரும் வீரர் என்றும், தன்னந்தந்தனியாகவே இந்தியாவின் பிரச்சினைகள் அனைத்தையும் கையாண்டு தீர்வு காண்பதில் ஈடிணையற்றவர் என்றும் போற்றிப் புகழ்கின்றனர். ஆனால், அவர் எம்.ஏ பட்டம் வாங்கியதற்கான சான்றைக் கேட்டால், கேட்பவருக்கு எதிராக வழக்குத் தொடுக்கின்றனர்.

**11. ஜெர்மன் நாஜிகள் இளம் உள்ளங்கள் மீது வைத்த குறி:** ஜெர்மானிய இளைஞர்களிடையேயும் சிறார்களிடமும் ஆரிய மேன்மைக் கருத்துகளையும் யூத விரோதக் கருத்துகளையும் புகுத்தினர்.

இந்திய நாஜிகளோ இந்துத்துவ வெறிக் கருத்துகளைப் பரப்ப பல்லாயிரக்கணக்கான பள்ளிகளையும் கல்லூரிகளையும் கொண்ட பெரும் வலைப் பின்னலை உருவாக்கியுள்ளனர். குழந்தைகளுக்கென்றே தனிப் பிரிவை உருவாக்கி அந்தப் பிஞ்சு உள்ளங்களிலும் இந்துத்துவ நச்சுக் கருத்துகளைப் புகுத்துகின்றனர். அது மட்டுமின்றி தேசியக் கல்வித் திட்டம் என்ற பெயரால், அவர்களின் நேரடிக் கட்டுப்பாட்டில் இல்லாத கல்விக்கூடங்களிலும், ஏன், உயர் கல்வி நிலையங்களிலும்கூட இந்துத் துவக் கருத்துகளைப் புகுத்தும் பாடத் திட்டங்களை நடைமுறைப்படுத்துகின்றனர்.

**12. ஜெர்மன் நாஜிகளின் மத விரோதம்:** ஜெர்மன் நாஜிகள் யூதர்களின் தேவாலயங்கள் மீது தாக்குதல் நடத்தி அவற்றைத் தகர்த்தெறிந்தனர்.

இந்திய நாஜிகளோ மசூதிகளையும் கிறிஸ்தவ தேவாலயங்களையும் தாக்கி அவற்றிலுள்ள பொருள்களை சூறையாடுவதுடன் அவற்றை இடித்துத் தள்ளவும் செய்கிறார்கள். பாபர் மசூதியை இடித்துத் தள்ளியது போதாதென்று பல நூற்றாண்டுக்கால வரலாறுருடையை வேறு மசூதிகள் மீதும் பார்வையைப் பதித்து அவை ஒருகாலத்தில் இந்துக் கோவில்களாக இருந்தன என்று 'நிரூபிப்பதற்கு' முயல்கிறார்கள். இதற்கு இந்திய ஒன்றிய அரசாங்கத்தின் தொல்லியல் துறையின் ஆதரவும் நீதிமன்றங்களின் ஆதரவும் கிடைக்கிறது.

**13. ஜெர்மன் நாஜிகளின் 'ஜனநாயகம்':** 'ஜனநாயக' முறை மூலமே நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை பெற்றதுடன் அவர்களது ஆட்சிக்கு முன்பிருந்த ஜெர்மன் குடியரசு வகுத்த அரசியலமைப்புச் சட்டத்தை முற்றிலுமாக மாற்றினர்; நிர்வாகத் துறை, நீதித் துறை முழுவதையும் தங்கள் கட்டுபாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

இந்திய பாசிசவாதிகளும் அவ்வாறேதான். தேர்தல் மூலம் நாடாளுமன்றத்தில் மூர்க்கத்தனமான பெரும்பான்மை பெற்றுள்ள அவர்கள், நிர்வாகத் துறை, நீதித்துறை ஆகியவற்றையும் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து விட்டனர். கடந்த ஐந்தாண்டுக் காலமாக உச்ச நீதிமன்றம் அளித்துள்ள பல தீர்ப்புகள் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தை அப்பட்டமாக மீறும் இந்துத் துவப் பாசிச அரசின் சட்டங்களுக்கும் அரசியலமைப்புச் சட்டத் திருத்தங்களுக்கும் முழுமையான ஒப்புதல் வழங்கியுள்ளன.

**14. ஜெர்மானிய நாஜிகளுக்கும் கார்ப்பரேட் நிறுவனங்களுக்குமிருந்த உறவு:** மிகப் பெரும் இரசாயன மற்றும் மருந்துப் பொருள்கள் தயாரிக்கும் நிறுவனமான ஐ.ஜி.ஃபார்பென் [(IG Farben) இது




யூதர்களைக் கொல்வதற்கான நச்சு வாயுவைத் தயாரித்து நாஜிகளுக்குக் கொடுத்தது], பி.எம்.டபிள்யூ (BMW), மெர்ஸெடெஸ்பென்ஸ் (Mercedes-Benz), வோக்ஸ்வேகன் (Volkswagen), ஆடி (Audi) ஆகிய பெரும் ஜெர்மன் மோட்டார் வாகனத் தொழிற்சாலைகள் மட்டுமல்லாது, அமெரிக்காவின் ஃபோர்ட் (Ford), ஜெனரல் மோட்டர்ஸ் (General Motors), ஆகியனவும் உயர்வகைத் தொழில் நுட்பங்களைப் பயன்படுத்தி போக்குவரத்து சாதனங்களைத் தயாரிக்கும் ஜெர்மானிய கார்ப்பரேட் நிறுவனம் ஸீமென்ஸ் (Siemens), விளையாட்டு சாதனங்கள், காலணிகள் முதலியவற்றைத் தயாரிக்கும் அடிடாஸ் (Adidas) முதலிய பெரும் முதலாளிய நிறுவனங்களும் முக்கிய ஜெர்மன் வங்கி களும் அமெரிக்க வங்கிகளும் நாஜிகளுக்குப் பெரும் ஆதரவளித்தன. கைது செய்யப்பட்ட பல்லாயிரக் கணக்கான யூதர்களை தங்கள் தொழிற்சாலைகளில் ஊதியமின்றி உழைக்க வைத்தன.

**15. ஜெர்மன் நாஜிச போர்க்குற்றவாளிகள்:** ஜெர்மன் நாஜி போர்க் குற்றவாளிகளைத் தண்டிப்பதற்காக நேச நாடுகள் (இரண்டாம் உலகப் போரில் வெற்றி பெற்ற ஏகாதிபத்திய நாடுகளும் சோசலிச சோவியத் யூனியனும்) இணைந்து உருவாக்கிய 'நியூரம்பரக் நீதிமன்றம்', சோவியத் யூனியனின் கோரிக்கைகளைப் புறந்தள்ளி நூற்றுக் கணக்கான நாஜி விஞ்ஞானிகளையும், தொழில்நுட்ப, இராணுவ வல்லுநர்களையும் அமெரிக்கா தன் நாட்டிற்கு அழைத்துச் செல்வதற்கு வழிவகுத்தது. போர்க் குற்றவாளிகளாகவும் இனக்கொலைக்கு ஆதரவளித்தவையாகவும் இருந்த மேற்சொன்ன கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு எவ்வித தண்டனையும் வழங்கப் படவில்லை. அவை இரண்டாம் உலகப் போரில் நாஜிகள் முறியடிக்கப்பட்ட பிறகு இன்று வரை கொழுத்த இலாபத்துடன் இயங்கிக் கொண்டிருக்கின்றன.

அதேபோலத்தான் இந்தியாவில் அதானி, அம்பானி, டாட்டா குழுமங்கள் (இவை முதலீடு செய்யாத தொழில், வணிகத் துறைகள், விமான நிலையங்கள், துறைமுகங்கள், போக்குவரத்து சாதனத் தொழிற்சாலைகள், இராணுவத்திற்கான ஆயுத உற்பத்தி மற்றும் துணையுபகரணங்களைத் தயாரிக்கும் தொழிற்சாலைகள் ஏதும் இல்லையென்றாகிவிட்டது), நாட்டுடைமயாக்கப்பட்டுள்ள வங்கிகள் ஆகியன இந்துத்துவ பாசிச அரசுக்குப் பல வகைகளில் உதவி செய்து வருகின்றன.

**16. நாஜிகளின் பொதுக் கூட்டங்களும் பேரணிகளும்:** நாஜிகள் நடத்திய பொதுக் கூட்டங்கள் பெரும் திரைப்படக் காட்சிகள் போல அமைந்திருந்தன. அதில் பங்கேற்று சொற்பொழிவாற்றியவர்கள் நடிகர்களைப் போலவே கைகளை அசைத்தும், குரலை உயர்த்தியும் முன்பக்கமும் பின்பக்கமும் இடப்புறமும் வலப்புறமும் தலைகளைத் திருப்பியும் அந்தந்த இடங்களுக்கேற்ற உடையலங்காரங்களுடன் சினிமா பாணியில் பேசியதைப் போலவேதான் மோடி, அமித்ஷா போன்ற இந்துத்துவ பாசிசத் தலைவர்கள் பொதுக்கூட்டங்களில் பேசுவதையும் 'ரோட் ஷோ' என்ற பெயரில் ஆர்ப்பாட்டமும் அலங்காரமும் மிக்க ஊர்வலங்களில் செல்வதையும் நாஜிகளின் கட்டுப்பாட்டிலிருந்த ஊடகங்களைப் போலவே இந்துத்துவ பாசிசத்தின் கட்டுப்பாட்டிலுள்ள ஊடகங்களும் மேற்சொன்னவற்றை மிக உற்சாகத்துடன் ஒலிபரப்புவதைப் பார்க்கிறோம்.

மேற்சொன்னவற்றைத் தொகுத்துக் கூறுவதென்றால், ஜெர்மனியில் பெரும் தொழில், நிதி நிறுவனங்களும் நாஜிகளின் இனமேன்மை, இன வெறுப்புக் கருத்துநிலைகளும் இணைந்து செயல்பட்டது போலவே இந்தியாவிலும் கார்ப்பரேட் நிறுவனங்களும் பார்ப்பனிய இந்துத்துவக் கருதுநிலையும் ஒன்றுகூடி மக்களை மயக்கியும் மடக்கியும் ஒடுக்கியும் வருகின்றன.

ஜெர்மானிய நாஜிகளுக்கும் ஹிட்லருக்கும் நேர்ந்த முடிவு என்ன என்பதை உலகமே அறியும். இந்திய பாசிஸ்டுகளுக்கும் அதே கதிதானோ? ❑

# பள்ளிகளில் சாதியப் பாகுபாடுகள்: கள ஆய்வறிக்கை

**(தமிழ்நாட்டில், குறிப்பாக தென் தமிழ்நாட்டில் பட்டியலின மக்கள் தாக்குதலுக்குள்ளாக்கப்படுவதும் படுகொலை செய்யப்படுவதும் அன்றாட நிகழ்வுகளாக மாறிக் கொண்டிருக்கிறது. மாணவப் பருவத்திலேயே சாதியாதிக்கச் சிந்தனை ஊட்டப்படுகிறது. அது பற்றிய ஒரு கள ஆய்வை தமிழ்நாடு தீண்டாமை ஒழிப்பு முன்னணி மேற்கொண்டது. சென்னையில் கடந்த 23.12.23ல் தமிழ்நாடு தீண்டாமை ஒழிப்பு முன்னணி வெளியிட்ட அறிக்கையிலிருந்து சில...)**

*சமூக சீர்திருத்த இயக்கங்களின் மாபெரும் பங்களிப்புகளால் மாற்றங்களைக் கண்ட தமிழ் நாட்டில் வெளிப்பட்ட கல்வி நிலையப் பாகுபாடுகள் அதிர்ச்சிகளை ஏற்படுத்தின.*

*பிளேடால் முதுகில் கீறியது, சாதிக் கயிறு பிரச்சினையில் தாக்குதல் மரணம், வீடு புகுந்து தாக்குதல் தடுத்த சகோதரியும் படுகாயம், அம் பேத்கர் படத்தை செல்போன் முகப்புப் படமாக வைத்ததற்கு தாக்குதல், பிற்படுத்தப்பட்ட சாதியைச் சேர்ந்த பெண்ணுடன் பேசிக் கொண்டு இருந்ததற்கு தாக்குதல்...என கொடூரமான நிகழ்வுகள் அரங்கேறின.*

*சாதிக் கயிறு, திலகம் கூடாது என 2019இல் அன்றைய அரசு ஒரு சுற்றறிக்கை விடுத்த போது பாஜக அதுவெல்லாம் மத நம்பிக்கையுடன் சம்பந்தப்பட்டவை, ஆகவே அரசு தடுக்கக் கூடாது என எதிர்ப்பு தெரிவித்தது. அன்றைய அஇஅதிமுக அரசும் பின் வாங்கியது.*

*இந்நிலையில் தமிழ்நாடு தீண்டாமை ஒழிப்பு முன்னணி கடந்த 3 மாதங்களாக களஆய்வு ஒன்றை "பள்ளிகளில் நிலவும் சாதியப் பாகுபாடுகள்" குறித்து தமிழ்நாட்டின் 36 மாவட்டங்களில் நடத்தியுள்ளது. 441 பள்ளிகளில் பயிலும் 644 மாணவர்களிடம் அவர்கள் வாழும் குடியிருப்புப் பகுதிகளில் இந்த ஆய்வு நடத்தப்பட்டுள்ளது. அதன் விவரங்கள் இங்கு தொகுக்கப்பட்டுள்ளன.*

*தமிழ்நாட்டிலும் சாதிய மேலாதிக்கம் கொண்ட இந்துத்துவா ஊடுருவல்கள், சாதிய ஆதிக்க சக்திகளின் செயல்பாடுகள் மாணவர்கள் மத்தியில் நிகழ்ந்து வருவதை இந்த ஆய்வின் மூலம் உணர முடிந்தது.*

**◆தீண்டாமை ஒழிப்பு முன்னணியின் ஆய்வின் விரிவும், வரம்பும்:**

*தமிழ்நாடு தீண்டாமை ஒழிப்பு முன்னணி 250 தன்னார்வ ஆய்வாளர்களுக்கு பயிற்சி தந்து 441 பள்ளிகளைச் சேர்ந்த 644 மாணவர்கள் மத்தியில் கள ஆய்வுகளை நடத்தியுள்ளது. இதில் 321 அரசுப் பள்ளிகள், 58 அரசு உதவி பெறும் பள்ளிகள், 62 தனியார் பள்ளிகள். 644 மாணவர்களில் 6 – 8 வகுப்பு 152 பேர், 9 – 10 வகுப்பு 219 பேர், 11 – 12 273 பேர் ஆவர். பாலின அடிப்படையில் 333 ஆண்கள், பெண்கள் 311. சாதிப் பிரிவினர் எனில் எஸ்.சி 438, எஸ்.சி (ஏ) 68, எம்.பி.சி 46, பிசி 41, எஸ்.டி 19, முற்பட்டவர் 1. சிலர் விவரம் தரவில்லை. மதம் எனில் இந்துக்கள் 532, கிறித்தவர் 22, இஸ்லாமியர் 9. மதம் சிலர் குறிப்பிடவில்லை.*

*ஆய்வுக்கான கேள்வித் தாளில் 78 விவரங்கள் கேட்கப்பட்டன. வகுப்பறை, இருக்கைகள், சக மாணவர் உறவு, ஆசிரியர் மாணவர் உறவு, பெற்றோர் அணுகுமுறை, ஆய்வகம், விளையாட்டு மைதானம், சாதிய அடையாளங்கள் உரையாடல்கள் ஏச்சுக்கள் கிண்டல்கள், மதிய உணவு, நூலகம், கழிப்பறை உள்ளிட்ட அடிப்படை கட்டமைப்புகள், போட்டிகள், தேர்வுகள், பரிசுகள், பாலியல் தொல்லை உள்ளிட்ட அம்சங்கள் அதில் இடம் பெற்று இருந்தன.*

*சாதிக்கென்று நிறத்தை கட்டமைத்து கயிறு, பொட்டு, டாலர், செயின், கடுக்கன், தொப்பி என அடையாளங்களுடன் பள்ளிகளுக்கு வருவதும், சாதி அடையாளத்துடன் தலைவர்கள் படத்தை பஸ் பாசுக்குள் வைத்து வருவது, டீ சர்ட்டுகள், பனியன்கள் சாதி அடையாளத்துடன் அமைவது என்பதும் உள்ளது. பதின் பருவத்தில் இயல்பாக ஏற்படும் சீண்டலுக்கான உந்தல் சாதிச் சீண்டலாக மடை மாற்றம் ஆகியுள்ளன. தேர்தலுக்கான வாக்கு வங்கி அரசியலும் சமூகம், குடும்பம் என ஊடுருவி பள்ளிகள் வரை நீள்கின்றன.*

**◆நேரடியாக சாதியப் பாகுபாடுகள் உள்ள**

**பள்ளிகளின் எண்ணிக்கை:**

✹ மாணவர்களிடம் சாதிய உணர்வை வெளிப் படுத்தும் மாணவர்கள் உள்ள பள்ளிகள் 24,

✹ சாதிய ரீதியாக குழுக்களாக மாணவர்கள் பிரிந்திருக்கும் பள்ளிகள் 10

✹ தண்ணீர் குடிப்பதற்கு ஒரு டம்ளர் இல்லாத பள்ளிகள் 19

✹ பலர் முன்னிலையில் சாதி குறித்து இழிவாகப் பேசும் பள்ளிகள் 10

✹ விளையாட்டு மைதானத்தில் / விளையாடு வதில் பாகுபாடுகள் உள்ளப் பள்ளிகள் 12

✹ சாதிய மோதல்கள் வந்து பள்ளி நிர்வாகத்தின் கவனத்துக்கு கொண்டு செல்லப்பட்ட பள்ளிகள் 25

✹ சாதிய ரீதியாகக் கைகளில் கயிறு,கடுக்கன், டாலர் செயின் அணிந்து வருவது 33

✹ பள்ளிகளில் சாதியப்பெருமை பேசுவது 38

இன்னும் பல ...

**ஆலோசனைகள்:**

✹ விரிவான "சமத்துவப் பள்ளிக்கான" வழி காட்டல் ஆவணத்தை வெளியிடலாம்.

✹ பள்ளிக் கல்வித் துறையின் கீழ் சமூகநீதிக் கென்று ஒரு தனிக் கட்டமைப்பை தலைமைச் செயலகம் முதல் மாவட்டங்கள் வரை ஏற்படுத்திட வேண்டும். இந்திய ஆட்சிப் பணி அதிகாரி ஒருவரை இதன் நிர்வாகப் பொறுப்பாளராக நியமித்திட வேண்டும்.

✹ சாதிப் பாகுபாடு குறித்த இலக்கணம் வரையறுக்கப்பட்டு அது குறித்த விழிப்புணர்வு மாணவர் ஆசிரியர் அலுவலகஊழியர் பெற்றோர் மத்தியில் உருவாக்கப்பட வேண்டும்.

✹ ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் அலுவலகப் பணியாளர்கள் உட்பட அனைவ ருக்கும் உளவியல் சார்ந்த வகுப்புகளை எடுக்க வேண்டும். அத்தோடு பாலினச் சமத்துவம் குறித்தான உரையாடலை நடத்திட வேண்டும்.

✹ ஆசிரியர் பயிற்சிகளிலும், மாணவர்களின் பாடத்திட்டத்திலும் சாதிப் பாகுபாடு ஒழிப்பு, சமத்துவ சிந்தனை குறித்த அம்சங்கள் இணைக்கப் பட வேண்டும். ஆசிரியர் அலுவலர் பணியில் சேர்ந்த பின்னர் அவர்களுக்கு இது குறித்த சிறப்புப் பயிற்சி நடத்தப்பட வேண்டும்.

✹ சாதி குறித்தான பார்வையை அறிவியல் பார்வையோடு ஒற்றுமைப்படுத்தி இந்தக் கண்ணோட்டத்தை மாற்ற வேண்டும். குறிப்பாக பாகுபாடு கொண்ட இந்த சாதியப் பிரச்சனைகளுக்கு ஆசிரியர்கள் கூடி விவாதிக்க வேண்டும்.

✹ பள்ளிகளில் சாதிய ரீதியாக ஊர் விழாக்க ளுக்கு முக்கியத்துவம் அளிப்பது நிறுத்தப்பட வேண்டும்.

✹ பள்ளி மேலாண்மை குழு முன்முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். மாணவர்கள் மத்தியில் சாதியக் கண்ணோட்டம் இல்லாமல் இருக்க பள்ளி மேலாண்மை குழு குறிப்பான நடவடிக்கைகளை செய்ய வேண்டும்.

✹ "சாதி மதம் பாரோம்" என்ற முழக்கத்துடன் ஒவ்வொரு ஆண்டும் மாணவர்கள் மத்தியில் பேச்சு, பாடல், ஓவிய, கட்டுரைப் போட்டிகள் நடத்தலாம். பெற்றோர்க்கும் இத்தகைய நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்யலாம்.

✹ சமூக சீர்திருத்த இயக்க முன்னோடிகளின் பணிகளையும், பங்களிப்புகளையும் குறித்த ஒரு துவக்க அறிமுகத்தை இவ்விழாக்களில் மாணவர் களுக்கு ஏற்படுத்திட வேண்டும்.

✹ மாணவர்கள் மன மாற்றத்திற்கு வழி வகுக்கும் வகையில் கலை நிகழ்ச்சிகளை நடத்திட வேண்டும். பிரபல இசை அமைப்பாளர்கள், பாடல் ஆசிரியர்களைப் பயன்படுத்தி அரசே சாதிய வேறுபாடுகளுக்கு எதிராகவும், அறிவியல் முனைப்பு உடையதாகவும் இசைப் பாடல்களை உருவாக்கி பள்ளி விழாக்களில், வகுப்பறைகளில் பகிர வேண்டும். கலை விழாக்கள், வீதி நாடகம் போன்ற விழிப்புணர்வுக் கொண்டாட்டங்களை ஊக்குவிக்க வேண்டும்.

இன்னும் பல ...

(ஆ.கு) இந்த ஆலோசனைகளை அரசு செயல்படுத்துவதில்தான் மாற்றத்திற்கான பாதை திறக்கப்படும். இந்தியாவில் பாஜக–சங்கிகள் திட்டமிட்டு இந்து மத வெறியை, மூட நம்பிக்கை களை பாடப் புத்தகங்களில் கொண்டு வருகின்ற இவ் வேளையில், தமிழ்நாட்டில் பெரியார், அம்பேத்கர், அயோத்தி தாசர், வள்ளலார் போன்றவர்களின் கருத்துகளை மாணவர்களிடம் திட்டமிட்டு கொண்டு செல்ல வேண்டும் தமிழ்நாடு அரசு.

**(தொகுப்பு : சந்திரமோகன்)**

# ஜனவரி 22 க்கு எதிராக ஜனவரி 26: இந்திய குடியரசின் எதிர்காலத்திற்கான போராட்டம்

**திபங்கர்**

ஜனவரி 22 அன்று அயோத்தியில் ராமர் கோயில் தொடக்கவிழா அல்லது குடமுழுக்கை முன்னிட்டு, இந்தியா முழுவதும் உள்ள பாஜக அரசாங்கங்களும் முதன்மை ஊடகங்களும் குறிப்பாக, இந்தி நாளேடு களும் தொலைகாட்சி அலைவரிசைகளும் விளம் பரங்களின் மின்னல் வேகத்தாக்குதலை மெய் யாகவே கட்டவிழ்த்து விட்டுள்ளன. நாடுதழுவிய ஒரு பேராரவாரத்தை உருவாக்கும் நோக்கில் சங்கிப் படையணியும் கூட, பரந்த மக்களை சென்றடைவ தற்கான திட்டத்தை அறிவித்துள்ளது. மதகுருமார்கள் இல்லாத நாட்டில் பெரும்பான்மை சமூகத்தின் மத உணர்வுகளை இத்தகைய கணக்கிடப்பட்ட, திட்டமிடப்பட்ட வகையில் அரசியலுக்குப் பயன்படுத்துவதை, அதுவும் பொதுத் தேர்தலுக்கு சற்று முன்னதாக பயன்படுத்துவதை இந்த உலகம் கண்ணுறுவது அரிதானது. முப்பத்தொரு ஆண்டு களுக்கு முன்னதாக அரசை மீறி பட்டப்பகலில் பாபர் மசூதியை சங்கிப்படையணி இடித்தது. இன்றோ அது ராமர் கோவிலை எழுப்ப அதே அரசை உச்சபட்ச அளவுக்குப் பயன்படுத்துகிறது. உடனடி பின்னணி யில் பார்க்கும் போது, வர இருக்கிற மக்களவைத் தேர்தல்களில் ராமர் கோவிலின் தொடக்கவிழா சங்கிப்படையணிக்கு நிச்சயமாக மிகப்பெரிய பேசு பொருளாக இருக்கும். சங்கிபாஜக நிறுவனத்துக்கு ராமர் கோவிலின் குறியீடு என்பது அதையும் தாண்டியதாகவும் இருக்கும். அவர்களைப் பொறுத்த வரை, இந்துராஷ்டிராவுக்கும் ‘இந்து அடையாள’த் திற்கும் இதுவொரு மாபெரும் சின்னமாகும். விடுதலை பெற்றதை விட மிகச் சிறந்த முக்கியத் துவம் வாய்ந்ததாகுமென சங்கி கருத்தியலாளர்கள் இதனை விவரிக்கிறார்கள். அவர்களுக்கு 1947 என்பது அரசியல் சுதந்திரத்தை மட்டுமே குறிக்கிறது. ஆனால் அதேசமயம் அயோத்தியின் ராமர் கோவில் என்பது கலாச்சார விடுதலையின் வகைமாதிரியாக திகழ்கிறது. எனவே தான் ஐநூறு ஆண்டுகள் காத்திருப்பையும் ‘அனைவருக்குமான ராமன்’ என்ற பரப்புரை இயக்கக் கருவையும் குறிப்பதற்கு ஐந்து விளக்குகளை ஏற்றுவதற்கான அழைப்பு விடுக்கப் பட்டுள்ளது.

இந்துத்வா கருத்தியலுக்கு சேவையாற்றவே இந்தக் கதையாடல் கட்டமைக்கப்படுகிறதெனவும் இதற்கு வரலாற்றில் எந்த வேர்களும் கிடையாது என்பதும் தெளிவாகவே தெரிகிறது. நிச்சயமாக, ராமாயணம் பல நூற்றாண்டுகளாக இந்தியாவின் மிகவும் பரவலாக அறியப்பட்ட காவியம் தான். ஆனால் பலதரப்பட்ட கலாச்சாரங்களிலும் பகுதிக ளிலும் பலதரப்பட்ட புரிதல்களை அது கொண் டுள்ளது. இந்திய விடுதலை இயக்கம் என பொதுவாக அறியப்படும், நவீன இந்தியாவுக்கான வேட்கையின் அந்த நீடித்த, பல்லடுக்கு கொண்ட, பல் பரிமாண வரலாறான இந்தியாவின் காலனிய எதிர்ப்பு சமூக, அரசியல் கொந்தளிப்பின் போது அயோத்தியில் ராமர் கோவில் கட்ட வேண்டும் என்ற பிரச்சனை ஒருபோதும் மெய்யாகவே எழவில்லை. உள்ளபடியே கூறினால், இந்து முஸ்லீம் ஒற்றுமையையும் நல்லிணக்கத்தையும் உச்சபட்ச வெளிப்பாட்டின் மூலம் குறிக்கும் 1857 எழுச்சியின் மய்யங்களில் ஒன்றாக உண்மையில் அயோத்தியும் இருந்தது. சுதந்திரம் பெற்றதையடுத்து, உடந்தை யாக செயல்பட்ட அரசு அங்கங்களால் எளிதாக்கப் பட்ட, கள்ளத்தனமாக பாபர் மசூதிக்குள் ராமர் சிலையை அமைத்ததன் மூலம் அந்தப் பிரச்சினை உருவாக்கப்பட்டு தக்கவைக்கப்பட்டது. ஒரு கோவிலை இடித்ததன் மூலம் பாபர் மசூதி கட்டப்பட்டது என்ற கூற்றும் கூட, தொல்லியல் துறையின் எந்தவொரு அகழ்வாய்விலும் நிரூபிக்கப் படவில்லை. அயோத்தியில் கட்டப்படும் கோவில் கட்டுமானம் 2019 இன் உச்ச நீதிமன்ற தீர்ப்பின் மூலம் தற்போது 'சட்டபூர்வமான அந்தஸ்தை' பெற்றுள்ளது. மசூதியை இடித்த செயல், இந்திய அரசியல் சாசன சட்டத்தை அருவருக்கத்தக்க விதத்தில் மீறியதாகும் என உச்ச நீதிமன்றம் கூறியபோதிலும் கூட, வழிபடும் இடத்தின் மீதான தாவா என்றென்றைக்கு மாக முடிவுக்கு வந்துவிடும் என்ற நம்பிக்கையில் அந்நிலத்தின் உரிமையை கோவிலின் அறக்கட்ட ளைக்கு வழங்கியது. அனைத்து வழிபாட்டு இடங்களும் ஆகஸ்ட் 15, 1947 அன்று இருந்தது போலவே தொடர்ந்து இருக்கும் என உத்தரவாதம் வழங்கிய 1991 சட்டத்திற்கும், சட்ட ரீதியாக பிரச்சினைக்குரிய கட்டிடமாக கருதப்படும் பாபர்

மசூதியை விதிவிலக்கு என இந்த 'விதிவிலக்கு வாதம்' தான் குறிப்பிட்டது. வழக்கத்திற்கு மாறான இந்த விதிவிலக்கு, புனிதமாக கருதப்படும் அனைத்து இடங்களின் மீதும் உரிமை கொண்டாட 1991 சட்டத்தை நீக்குவதைப் பற்றி சிந்திக்கும் துணிச்சலைத்தான் சங்கிப்படையணிக்கு வழங்கியது.

மதச்சார்பின்மை என்னும் வார்த்தை தொடக்கத் திலிருந்தே சங்கிப்படையணிக்கு ஒவ்வாததாக இருந்து கொண்டிருக்கிறது. அவசர காலத்தின் போது சட்டத் திருத்தத்தின் வழியாக அரசியல் சாசன சட்டத்திற்கான முன்னுரையில் இந்த வார்த்தை சேர்க்கப்பட்டதிலிருந்தே இந்திய ஆட்சியமைப்பின், அரசியல் சாசன சட்டத்தின் மதச்சார்பின்மை பண்பை சட்டரீதியாகவே ஒழித்து விடலாம் என சங்கிப் படையணி நினைக்கிறது. மதத்தையும் அரசிய லையும் பிரித்து நிறுத்துவது, மத விவகாரங்களில் தலையிடுவதிலிருந்து அரசை விலக்கி வைப்பது, மதத்தை நிர்வகிப்பவர்கள் அரசின் விவகாரங்களில் தலையிடாமலிருப்பது என்ற அர்த்தத்திலான மதச்சார்பின்மையே ஒரு நவீன குடியரசின் கருத்தாக்கத்திற்கான மய்யமாகும். இந்தியா போன்ற பல்மத பன்மை கலாச்சார நாட்டின் ஜனநாயகத்துக்கு இதுவே மிக மிக அடிப்படையானதாகும். அனைத்து சாத்தியமான வழிகளிலும் இந்திய ஆட்சியமைப்பின் மதச்சார்பின்மை குணத்தை கீழ்மைப்படுத்த ராமர் கோவிலை மோடி அரசாங்கம் பயன்படுத்துகிறது. மதத்தையும் அரசியலையும் பிரித்து நிறுத்துவதற்கு மாறாக, மதமும் அரசியலும் மெய்யாகவே ஒருங்கி ணைக்கப்படுவதை நாம் தற்போது காண்கிறோம்.

இந்த ஒருங்கிணைப்பு, உண்மைக்கும் மக்களுக்கும் கடப்பாட்டுடன் ராமர் இருந்ததாக அறியப்படும் அயோத்தியின் போற்றுதலுக்குரிய 'ராம ராஜ்ய'த்தை நோக்கி இந்தியாவை கொண்டு செல்லவில்லை. மாறாக, அது உரிமைகள் மறுக்கப் பட்டு, அதிகாரம் இழந்தவர்களாக குடிமக்கள் இருக்கிற, அரசாலும் சமூகத்தாலும் இழைக்கப் படுகிற ஒவ்வொரு கொடுமைக்கும் அநீதிக்கும் மதத்தின் மூலம் நியாயம் கற்பிக்கிற, மனுஸ்மிரிதி வழிமுறையிலான ஆட்சி நிர்வாகத்திற்கு இந்தி யாவைத் தள்ளுகிறது. நாடாளுமன்றத் துக்கும் மக்களுக்கும் பொறுப்பானவராக இருக்க வேண்டிய தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதம மந்திரி ஒரு ராமர் கோவிலுக்கு குடமுழுக்கு நடத்தும் உயர்நிலை பூசாரியாக ஆக்கப்படும்போது, அனைத்தும் இறையருளால் ஏற்படுத்தப்பட்டதாக ஏற்றுக் கொள்ளவும் வெறுப்பு, அநீதியின் பழங்கால பார்ப்பனிய ஒழுங்கிற்கு அடிபணியவும் மக்கள் உண்மையிலேயே உத்வேகமூட்டப்படுகிறார்கள். இது மதச்சார்பின்மைக்கு மட்டும் நேர் எதிரானதல்ல; மக்களிடமிருந்து அதிகாரத்தை பெறுகிற நவீன குடியரசு என்ற கருத்துக்கே எதிரானதாகும். இறை ஆசீர்வாதமாக மக்கள் மீது தன்னை தற்போது இந்த அரசாட்சி திணிக்க முயற்சிக்கும் அதேவேளையில் சமீபத்திய மத்திய பிரதேசம், சத்தீஸ்கர், ராஜஸ்தான் சட்டமன்ற தேர்தலில் பாஜக பெற்ற வெற்றியை தொடர்ந்து ஃபினான்சியல் டைம்ஸ் ஏட்டிற்கு அளித்த நேர்காணலில் மோடி குறிப்பிட்டது போன்று, ‘முன்னேற்றத்தின் விளிம்பில்’ இந்தியாவைக் கொண்டு வந்து நிறுத்தியுள்ளதாக வெளி உலகிற்கு அது கூறுகிறது. அதே நேர் காணலில் இந்திய ஜனநாயகத்தின் நிலை குறித்து எவ்வித கவலைகளையும் அவை இந்திய மக்களின் அறிவாற்றலுக்கு ஒரு அவமானம் எனக் கூறி பிதற்றல்கள் என அவற்றை மோடி புறந்தள்ளுகிறார். பார்சி சமூகத்தினரான டாட்டா குழுமத்தை இந்திய சிறுபான்மையினர்களுக்கான விளம்பரமாக பயன்படுத்துகிறார். இந்தியாவிலிருந்து ‘அறிவு வெளியேற்றம்’ தொடர்ந்து நிகழ்வது குறித்து கேட்கப்பட்ட போது, கூகுள் மைக்ரோ சாப்ட் போன்ற பிரும்மாண்டமான உலக மென்பொருள் நிறுவனங் களின் இந்திய வம்சாவளி முதன்மை செயல் அதிகாரிகளை (சிஇஓ) காட்சிப்படுத்துகிறார். இந்தியாவில் சிவில் உரிமைகள் மீதான அதிகரித்து வரும் தாக்குதல்கள் குறித்த பிரச்சினைக்கு நீண்ட ஏளன சிரிப்பை பதிலாகத் தருகிறார். ‘இந்தியாவில் தற்போதுள்ள சுதந்திரத்தை பயன்படுத்தி’ எதிர்ப் பாளர்கள் இந்த அரசாட்சியின் மீது 'குற்றச்சாட்டு களை' அள்ளி வீசுவதாக அவற்றை புறந்தள்ளுகிறார்.

‘இந்தியா: த மோடி கொஸ்டின்’ என்ற பிபிசியின் ஆவணப்படத்தில், 2002 குஜராத் படுகொலைகளை பொறுத்தவரையில் தனது ஒரே வருத்தம் என்னவென்றால் தான் ஊடகத்தை சரியாக கையாள முடியவில்லை என்பதுதான் என குஜராத் முதலமைச்சராக மோடி சொல்வதை கேட்கிறோம். அவருடைய அரசாட்சி தற்போது கொண்டிருக்கும் ஊடக கட்டுப்பாட்டை போன்று 2002 லும் கொண்டிருந்தால் குஜராத் குறித்த பெரும்பாலான உண்மைகள் ஒரு போதும் வெளிச்சத்திற்கு வராமலே போயிருக்கும். அதேபோன்று அவரது விமர்சகர் களுக்கும் எதிர்ப்பாளர்களுக்கும் ‘இந்தியாவில்

இருக்கும் சுதந்திரம்' குறித்து பதிலளிக்கையில் தெளிவான ஒரு வருத்த உணர்வு அவரிடம் வெளிப்படுகிறது. தேசிய தண்டனைச் சட்டம், சாட்சிய சட்டம், இணைய வலைதளங்களுக்கும் எண் கணித தளங்களுக்கும் நீட்டிக்கப்பட்டுள்ள புதிய ஊடக கட்டுப்பாடுகள் என முழுமையாக 2023 டிசம்பரில் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள புதிய சட்ட வடிவமைப்பு ஆகியவற்றின் மூலம் மிச்சமிருக்கும் சுதந்திரத்தின் நாட்களும் எண்ணப்படுகின்றன என்பதை தெளிவாகவே உணர்த்துகிறது. உச்ச நீதிமன்றம் அதன் பயன்பாட்டை தடுத்து நிறுத்தியதற்கு முன்பாக கண்மூடித்தனமாக 2022 வரை அதனை செயல்படுத்திக் கொண்டிருந்த காலனிய கால தேச துரோகச் சட்டத்தை விட்டொழிப்பது என்னும் பெயரில் எதிர் கருத்தின் ஒவ்வொரு சாத்தியமான வடிவத்தையும் அல்லது வெளிப்பாட்டையும் குற்றமாக்கிடும் வகையில் இந்த அரசாங்கம் பயங்கரவாதத்தின் வரையறைகளை விரிவுபடுத்தியுள்ளது.

1950 ஜனவரி 26 இல் அமலுக்கு வந்த அரசியல் சாசன சட்டத்தில் பொறிக்கப்பட்டுள்ள மதிப்பீடுகளையும் இலக்குகளையும் அப்பட்டமாக மீறியதை அரசு கொண்டாடுகிற போது, சங்கிப் படையணிக்கு, மெய்யான புதிய குடியரசு நாளாக ஜனவரி 22 குறிக்கப்படும். குடியரசு நாள், இந்திய நாடாளுமன்ற ஜனநாயகத்தின் அரசியல் சாசன சட்ட அடிப்படைகளின் மீள்திறனை கொண்டாடுவதற்கு மாறாக, இந்தியாவின் இராணுவ வலிமையை கொண்டாடுவதாக நீண்ட காலமாகவே சுருக்கப்பட்டு விட்டது. நவீன இந்தியாவின் அரசியல் சாசன சட்ட பிடிமானங்களை மீட்டெடுப்பதற்கான சவால்கள், வர இருக்கிற 2024 குடியரசு நாளை விட வேறெப்போதும் தெட்டத் தெளிவாக இருக்கப் போவதில்லை. இந்தியக் குடியரசு மதச்சார்பற்ற ஜனநாயகமாக மட்டுமே உயிர்த்திருக்க முடியும். 1950 ஜனவரி 26 இல் நமது சுதந்திர குடியரசின் பிறப்பை அறிவித்தவர்களை முன்னோர்களாக கொண்ட இந்திய மக்களாகிய நாம் நமது அனைத்து வலிமை, துணிவு, மன உறுதி ஆகியவற்றைக் கொண்டு அந்தக் கனவைப் பேணி பாதுகாக்க வேண்டும்.

**தமிழாக்கம் – செந்தில்**

# தோழர் ராமப்பாவிற்கு செவ்வணக்கம்!



சிபிஐ எம்எல் கட்சியின் கர்நாடகா மாநிலக்குழு உறுப்பினர் தோழர் ராமப்பா கடந்த 31.12.2023 அன்று இருதய நோய் பிரச்சினையின் காரணமாக காலமானார். அவருக்கு வயது 60. விஜயநகர் மாவட்டச் செயலாளராக பல ஆண்டுகள் செயலாற்றினார். அவர் கட்சியின் கர்நாடகா மாநிலச் செயலாளராகவும் பணியாற்றியுள்ளார். அயர்லா மற்றும் ஏஐகேஎம் ஆகியவற்றிற்கு கட்சிப் பொறுப்பாளராகவும் செயலாற்றினார். தோழர் ராமப்பா தன்னுடைய மாணவர் பருவத்தில் இருந்தே அடித்தட்டு மக்களுக்காகவும் தலித் மக்களுக்காகவும் அவர்களின் உரிமைக்காகப் போராடி வந்தார். தலித் சமூகத்தைச் சேராத தோழர் ராமப்பா, தலித் மக்களுக்காக தலித் சங்கராஷ் சமீதி அமைப்பில் முக்கிய பங்காற்றினார். 1998ல் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் மார்க்சிஸ்ட் லெனினிஸ்ட் கட்சியின் மைசூர் தொகுதி வேட்பாளராகப் போட்டியிட்டார். 2004ல் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் பெல்லாரி தொகுதி வேட்பாளராகப் போட்டியிட்டு 12413 வாக்குகள் பெற்றார். கிராமப்புற, நகர்புற வறிய மக்களின் போராட்ட அடையாளமாக சிவப்புத் துண்டை அவர்கள் மத்தியில் அறிமுகப்படுத்தினார். அவர். தோழர் ராமப்பா பல்வேறு மக்கள் போராட்டங்களை முன்னின்று நடத்தியுள்ளார். கட்சியின் தலைமறைவு காலத்தில் இருந்து தற்போதைய காலம் வரை ஒடுக்கப்பட்ட மக்களுக்காக, உழைக்கும் மக்களுக்காக தன் வாழ்நாள்களை அர்ப்பணித்தார். அவருடைய மரணம் எதிர்பாராதது. தோழர் ராமப்பாவின் வாழ்க்கை அனைவருக்கும் உணர்வையும் உத்வேகத்தையும் ஊட்டும். தோழர் ராமப்பாவிற்கு செவ்வணக்கம். ❑

# நம் முன்னே இரண்டு கடமைகள் உள்ளன. ஒன்று மோடியை ஆட்சியில் இருந்து அகற்றுவது. மற்றொன்று நமது அமைப்பை பலமானதாக கட்டி எழுப்புவது

(கரூரில் நடைபெற்ற ஏஐசிசிடியு தமிழ்நாடு மாநில மாநாட்டில் அகில இந்திய பொதுச் செயலாளர் தோழர் ராஜீவ் டிம்ரி ஆற்றிய உரையிலிருந்து...)




சுதந்திர இந்தியாவின் 75 ஆவது ஆண்டில் மத்தியில் ஆட்சியில் உள்ள மோடி அரசு, இந்திய சுதந்திர வரலாற்றின் மிகவும் மோசமான கார்ப்பரேட் ஆதரவு, தொழிலாளர் விரோத அரசாக இருக்கிறது. இந்தியத் தொழிலாளர் வர்க்கம் போராடிப் பெற்ற உரிமைகள் அனைத்தும் பறிக்கப்பட்டு வருகின்றன. மக்களை திசை திருப்பும் வேலையை பாஜக செய்து வருகிறது. இந்த அரசாங்கம் பேரழிவு மிக்க அரசாங்க மாக இருக்கிறது. உழைக்கும் மக்களின் வாழ்வா தாரங்களை பறித்து விட்டு 'மோடி உத்திரவாதம்' என்று பசப்புகிறது. நேரடியாக வங்கி கணக்கில் பணம் செலுத்தப்படும் என்று சொல்லி மக்களை மோடியின் தயவில் இருக்குமாறு சொல்கிறது. நாட்டின் வளங்களை, பொதுத்துறை நிறுவனங் களை அதானி அம்பானிகளுக்கு அடிமாட்டு விலைக்கு விற்கிறார்கள். இன்னொரு புறம் நாட்டின் ஜனநாயகத்தையும் அரசியலமைப்புச் சட்டத்தையும் புல்டோசர் கொண்டு இடித்து தள்ளும் வேலையிலும் இந்த ஆட்சி இறங்கியிருக்கிறது. நாட்டின் மதச்சார் பற்ற கட்டமைப்பை இவர்கள் ஒழித்துக் கட்டுகி றார்கள். ஜி 20 நாடுகளின் நாயகனாக மோடியை நிறுத்திவிட்டு, மக்கள் பிரச்சனைகளை மூடி மறைக்கி றார்கள். பாலஸ்தீனத்தின் காஸாவை ஒழித்துக் கொண்டிருக்கும் இஸ்ரேலுக்கு வெட்கக்கேடான விதத்தில் இந்தியா விலிருந்து லட்சக்கணக்கான கட்டுமான தொழிலாளர்களை அனுப்ப இந்த அரசு ஒப்பந்தம் போடுகிறது.

இந்திய உழைக்கும் மக்களுக்குள் பிளவை ஏற்படுத்த பாலஸ்தீன பிரச்சனையை கூட பயன் படுத்துகிறது. அந்த அளவுக்கு கீழ்த்தரமாக சென்று விட்டது. மைய தொழிற்சங்கங்களும் விவசாய இயக்கங்களும் ஒன்றுபட்டு அடுக்கடுக்கான போராட்டங்களை நடத்தி வருகிறோம். சமீபத்தில் மூன்று நாட்கள் தொடர்ச்சியாக நடைபெற்ற பெருந்திரள் அமர்வுக்கு பிறகு டிசம்பர் 15 முதல் பிப்ரவரி முதல் வாரம் வரை நாடு தழுவிய மக்கள் சந்திப்பு இயக்கத்துக்கு அழைப்பு விடுக்கப் பட்டுள்ளது. நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்பாக நாடு தழுவிய நேரடி நடவடிக்கையில் அனைவரும் சேர்ந்து இறங்கும் திட்டமும் உள்ளது. உழைக்கும் மக்கள் பிரச்சனைகள் மீது சக்தி வாய்ந்த இயக்கத்தை கட்டுவது ஒன்றுதான் மோடி அரசை அகற்றுவதற்கான ஒரே வழியாக இருக்கும்.

நம் முன்னே இரண்டு கடமைகள் உள்ளன. ஒன்று மோடியை ஆட்சியில் இருந்து அகற்றுவது. மற்றொன்று நமது அமைப்பை பலமானதாக கட்டி எழுப்புவது. வலுவான அமைப்பு இல்லை என்றால், மிகப்பெரிய உறுப்பினர் எண்ணிக்கை பலம் இல்லை என்றால், பெரும் எண்ணிக்கையில் மக்களை அணி திரட்ட முடியவில்லை என்றால் இந்த தாக்குதலை எதிர்கொள்வது கடினமான பணியாகி விடும்.

தமிழ்நாட்டுத் தோழர்கள் பல்வேறு நெருக் கடிகளை சந்தித்து, அதை கடந்து வந்தது மட்டு மல்ல, கடினப்பட்டு அமைப்பையும் உறுதிப்படுத்தி முன்னேற்றம் கண்டிருக்கிறீர்கள். அதற்காக உங்களை பாராட்டுகிறேன் சிறப்பு வணக்கத்தை தெரிவித்துக் கொள்கின்றேன்.

பாஜகவை பொறுத்தவரை தமிழ்நாட்டில் அது தேர்தல் களத்தில் வலுவான சக்தியாக இல்லை. ஆனால், அது இடைவிடாமல் மத வெறிக் கருத்துக் களை சமூகத்தில் பரப்ப முயற்சி செய்து கொண்டே இருக்கிறது. ஆகவே பாஜக விசயத்தில் சுய திருப்தி மனப்பான்மை கூடாது. விழிப்புடன் இருந்தாக வேண்டும். மாநாட்டில் தேர்ந்தெடுக்கப்பட உள்ள புதிய கமிட்டி மாநாட்டின் முடிவுகளை அமல் படுத்துவதில் உரிய பங்காற்றும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

செவ்வணக்கம் தோழர்களே!! ❑

MALAE THEEPORI. Registered with Registrar of NewsPaper for India TN/TAM/2002/12013
Posted on 05.01.2024 at Egmore RMS/1 Patrika Channel Regn No:TN/CCN/368/2021-2023
Published on 1st and 16th of every month R.DIS: 2804/17 Licensed to Post WPP TN/PMG/(CCR)/WPP-436/2021-2023




Owned and Published bys; S.Balasundaram from 1/10, 11th street, Karunanidhi Nagar, Ayanavaram, Chennai - 600023
Printed by R.Murugan at Print Point, 10, Pulipone Bazar 2nd Lane, Triplicane, Chennai - 600005. Editor G.Ramesh